360
360

இந்திய சரித்திரக் காதை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 OCT 1939
MADRAS

(முதற் புத்தகம்)

C. S. ரங்கஸ்வாமி, பி. ஏ., எல். டி.
இயற்றியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது
[2-5-'39 கெஜட், 114 ஆம் பக்கம் பார்க்க]

சென்னை:
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1939

ரெஜிஸ்தர் செய்தது] [விலை 5 அணா

இந்திய சரித்திரக் கதை.

(முதற் புத்தகம்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 OCT 1939
MADRAS

C. S. ரங்கஸ்வாமி, பி. ஏ., எல். டி.
இயற்றியது

954
39225

துரைத்தனத்தார் அங்கீகரித்தது
[2-5-39 கெஜட் 114 - ஆம் பக்கம் பார்க்க]

சென்னை :
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1939

ரெஜிஸ்தர் செய்தது] [விலை 5 அணா

PRINTED AT
THE 'CAXTON PRESS'
MADRAS.

முகவுரை

இப்புத்தகம் நமது ஆரம்பப் பாடசாலைகளின் உபயோகத்துக்காக எழுதப்பட்டது. நமது நாட்டுக் கதைகள் சில அடங்கியது.

இதில் ஒவ்வொரு பாடத்திலும் ஒன்று அல்லது இரண்டு முக்கிய விஷயங்களையே சொல்லி யிருக்கிறது. சம்பவங்கள் நடந்த இடங்களைக் காட்ட சில படங்கள் உண்டு. அவற்றில் ஒவ்வொன்றும் இந்தியாவின் எந்தப் பாகத்தைக் காட்டுகின்றன அல்லது இந்தியாவுக்கு எந்தப் பக்கத்திலுள்ள நாட்டைக் குறிக்கின்றன என்று தெரிந்து கொள்ள வேண்டும். பாடத்தோடு பாடத்தை சம்பந்தப் படுத்தும் குறிப்புகளையும் கவனிக்கவேண்டும்.

ஒரு பாடத்தை நடத்த: படத்தைக் காட்டி பாடத்திலுள்ள விஷயம் எங்கு நடந்ததென்று தெரிவிக்க; பிறகு பாட விஷயத்தை வாய்முறையாய்ப் பிள்ளைகளுக்குச் சொல்லுக; கேள்விகளுக்கேற்ற பதில் தருவிக்க; கடைசியாய்ப் பாடத்தை ஒருதரம் வாசிக்கச் செய்க.

C. S. R.

பொருள் அடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	இந்தியா	1
2.	சத்திய காமர்	௩
3.	பரதனும் அவர் தாயும்	6
4.	ஒத்துவாழ்ந்த பஞ்சவர்கள்	11
5.	துறவுபூண்ட அரசகுமாரன்	16
6.	கோர்டியஸ் போட்ட முடி	19
7.	தான்செய்த தவறு அறிந்த அரசன்	23
8.	பிறர் கஷ்டத்தைப் பார்த்துச் சந்தோஷித்த கொடியோன்	27
9.	கயையில் ஒரு புதிய மடம்	31
10.	காவிரியாற்றின் அணை	34
11.	சகோதரியைக் காப்பாற்றியது	37
12.	அராபியாவில் உதித்த நபி	39
13.	அவன் சத்தியத்துக்குக் கட்டுப்படவில்லை	42
14.	வியாபாரிகளா, அல்லது — ?	46
15.	பயமுறுத்திக் காரியசித்தி பெற்றான்	48
16.	கட்டடம் விழுந்து இறந்த அரசன்	51
17.	பிள்ளைக்காக உயிர் துறந்த பெரியோன்	54
18.	வேட்டையை வெறுத்த மன்னன்	56
19.	தனது பத்தினியின் ஞாபகார்த்தம்	58
20.	குமாரனின் தீர்மானம்	62
21.	துக்காராம் பாவா	65
22.	பசுவையும் தர்மத்தையும் காத்தவன்	68
23.	மிளகு விலை அதிகமானது	71
24.	சிறு படை பெரிய சைனியத்தை வென்றது	74
25.	கஞ்சியே எங்களுக்குப் போதும்	77
26.	டில்லியில் ஒரு கொண்டாட்டம்	81
27.	ஆறாவது ஜியார்ஜ் மன்னர்	83



இமயமலை
ஸிந்து
ஸத்லெஜ்
ஹிந்துஸ்தானம்
யமுனை
கங்கை
சம்பல்
கங்கை
நர்மதை
கோதாவரி
தக்ஷிணம்
கிருஷ்ணா
அரபிக்
கடல்
வங்காளக்
குடாக்கடல்
தமிழ்-
காவிரி
-நாடு
சிம்மளத்தீவு
இந்தியா

இந்திய சரித்திரக் காதை

(முதற் புத்தகம்)

---

1. இந்தியா

நாம் வசிப்பது இந்தியா தேசம். அத்தேசத்தில் தென் பாகத்தில் சென்னை மாகாணத்தில் தமிழ் நாட்டில் நாம் இருந்து வருகிறோம். உங்கள் ஜில்லாவின் பெயரென்ன? உங்கள் கிராமத்தின் அல்லது பட்டணத்தின் பெயரென்ன?

இந்தத் தேசத்தில் வெகு காலமாகக் கோடிக் கணக்கான ஜனங்கள் வசித்திருக்கிறார்கள். இப்பொழுது பிரிடிஷ் அரசர் ஜ்யார்ஜ் சக்கரவர்த்தி நம்மை அரசாளுகிறார் அல்லவா? அம்மாதிரி இத்தேசத்தில் பல சமயங்களில் பல அரசர்கள் ஆளுகை செய்திருக்கின்றனர். அவர்கள் இத்தேசத்தில் ஒரு பெரிய பகுதிக்காவது சிறிய பகுதிக்காவது அரசர்களாயிருந்திருக்கின்றனர். பழைய காலத்தில் நமது நாட்டில் ஐம்பத்தாறு தேசங்கள் இருந்ததாகச் சொல்வதுண்டு. இந்தியாவுக்கே பரதக்கண்டம் என்று பெயர்.

அரசர்களைத் தவிர இந் நாட்டில் ஒழுக்கத்திலும், ஞானத்திலும், வீரத்திலும் சிறந்த பலர் வாழ்ந்தனர். அவர்களைப் பார்த்து அவர் நல்லொழுக்கங்களைத் தழுவி இந்திய ஜனங்கள் சிறப்புடையவராக இருந்தனர்.

அவர்களில் சிலர் கதையை இங்கு உங்களுக்குச் சொல்லுவோம்.

கேள்விகள்

1. நாம் வசிக்கும் மாகாணம், உங்கள் ஜில்லா, கிராமம் அல்லது பட்டணம் இவைகளைச் சொல்லுக.
2. தற்காலம் நமது அரசர் யார்?
3. இப்பொழுது நமக்குச் சக்கரவர்த்தியாக ஒருவரே இருக்கிறார். முன்னாளில் நமது தேசத்தில் எவ்வளவு ராஜாங்கங்கள் இருந்ததாகச் சொல்லுவார்கள்?
4. இந்தியாவின் பழைய பெயர் என்ன?
5. இந்தியர் முன்னாள் சிறந்து விளங்கியது எதனால்?

செயல், குறிப்பு

வெளி எல்லையைக் காட்டும் இந்திய படம் ஒன்று வரைக. அதில் கீழே கண்டவைகளைக் குறிக்க :—இமயமலை, ஹிந்துஸ்தானம், தக்ஷிணம், தமிழ்நாடு, வங்காளக்குடா, அரபிக்கடல், சிம்மளத் தீவு.

கண்டம் என்பது பல தேசங்களுடையது.

2. சத்திய காமர்

முன்னொரு காலத்தில் வட இந்தியாவில் ஜாபாலர் என்றொரு ரிஷி இருந்தார். ரிஷி என்ருல் அறிவும் ஒழுக்கமும் உடையவர் என்றர்த்தம். ஜாபாலர் ஒரு வனத்தில் இலைகளால் வேயப்பட்ட ஒரு குடிசையில் வசித்து வந்தார். அவருக்கு அங்கு அகப்படக்கூடிய பழங்கள், கிழங்குகள், தானியங்கள் முதலியவைகளே ஆகாரமாம். ஜாபாலர் சிறந்த ஞானவாளுய் இருந்தார். அவர் நற்குணமுடையவர். நல்ல படிப்பாளி. ஆகையால் அவரிடம் பல சிஷ்ர்கள் பாடம்படித்து வந்தனர். அவர்கள் அப்பெரியவருடைய குடிசையிலும் அதை அடுத்துள்ள வேறிடங்களிலும் இருப்பார்கள். ரிஷிகள் இருக்குமிடங்கள் ஆசிரமங்கள் எனப் பெயர் பெறும். அவற்றைச் சுற்றியுள்ள விடங்களுக்கு ரிஷிகுலங்களெனப் பெயர்.

சிஷ்ர் தமது குருவிடம் பயபக்தி உள்ளவர்களாயிருந்து அவர் சொல்வதைக் கருத்தாய்க் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். தமது குரு ஏவிய சகல வேலைகளையும் அச் சிஷ்ர்கள் தவருது செய்வார்கள். ஆனல் பொருள், வீடு முதலியன இல்லாமல் காட்டில் வசிக்கும் பெரியோருக்குச் செய்யவேண்டிய பணிவிடைகள் மிகக் கொஞ்சமாகத்தானிருக்கும்.



ஜாபாலர் சத்தியகாமனை குலம் முதலியன விசாரிக்கிறார்

ஜாபாலரிடம் ஒருநாள் சத்தியகாமர் என்ற ஒரு சிறு பிள்ளை வந்தார். வந்தவர் அவரை நமஸ்கரித்துத் தன்னையும் அவருடைய சிஷ்யர்களில் ஒருவராகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென வேண்டினர். ரிஷியும் சம்மதித்துச் சத்திய காமரை, அவரது ஜாதி யாது, வம்சம் யாது, அவரது தகப்பனர் யார் என வினவினர்.

சத்தியகாமருக்கோ தமது தாயைத்தான் தெரியும். அவர் அந்த அம்மாளிடம் சென்று ரிஷி கேட்ட விஷயங்களைச் சொன்னர். அவர் தாய், "அப்பனே, உனது தகப்பனர் எனது சிறு வயதிலேயே இறந்தனர். அதுமுதல் நான் ரிஷிகள் வசித்துவரும் ஆசிரமங்களிலேயே சிறு வேலைகளைச் செய்துகொண்டு வருகிறேன். உன்னுடைய குலம், கோத்திரம் முதலியவற்றை நான் விசாரிக்கவில்லை. அவை எனக்குத் தெரியாது" என்ருள்.

சத்தியகாமர் தன் தாயின் வார்த்தைகளைக் குருவினிடம் சொல்லினர். ஜாபாலரும்இம் மாதிரி உண்மை பேசுபவர் நற்குலத்தில் பிறந்தவராகவே இருக்கவேண்டுமென்று சொல்லி அவரைத் தன்னுடைய சிஷ்ராகச் சந்தோஷமாய்ச் சேர்த்துக் கொண்டனர்.

சத்தியகாமர் பின்னர் தாமே ஒரு பெரிய ரிஷியாக விளங்கினர்.

கேள்விகள்

1. ரிஷி, ரிஷிகுலம், ஆசிரமம் என்றால் என்ன?
2. ரிஷிகள் எங்கு வசிப்பார்கள்? அவர்கள் சாப்பாட்டுக்கு என்ன செய்வார்கள்?
3. ஜாபாலரிடம் சிஷர்கள் எதற்காக வந்தனர்?
4. சத்தியகாமர் தம்மிடம் வந்தபொழுது ஜாபாலர் அவரை என்ன கேட்டார்? அவர் அதற்கு என்ன பதில் தெரிவித்தார்?
5. சத்தியகாமர் நற்குலத்தாரென்று ஏன் ஜாபாலர் நினைத்தனர்?

குறிப்பு

சத்தியகாமர் — சத்தியம் என்றால் உண்மை; காமர் என்றால் விரும்புவர். மொத்த அர்த்தம் என்ன?

3. பரதனும் அவர் தாயும்

வட இந்தியாவில் உத்தரகோசல மென்றொரு நாடு இருந்தது. அதற்கு அயோத்தி பிரதான நகரம். அதில் முற்காலத்தில் தசரத சக்கரவர்த்தி என்று பெயர்பெற்ற ஒரு அரசர் ஆட்சி புரிந்து வந்தார். அவருக்கு நான்கு புத்திரர்கள். அவர்கள் நற்குணமும் ராஜலக்ஷணங்களும் பொருந்தியவர்கள். அவர்களுக்குள் அன்பும் நேசமும் வெகு அதிகம்.

சக்கரவர்த்தி தமக்கு வயது ஆகவே தமது மூத்த குமாரரான ராமனுக்குப் பட்டாபிஷேகத்துக்கு ஏற்பாடு செய்தார். அப்பொழுது அவரது மூன்ருவது ராணி கைகேசி என்பவள், கூனி என்பவளின் துர்ப்போதனையைக் கேட்டு, ராமனைப் பதினைன்கு வருஷம் காட்டுக்கு அனுப்பும்படியும் தனது புத்திரன் பரதனைப் பட்டமாளச் செய்யும்படியும் தசரதரை வேண்டினள். ஏற்கெனவே இரண்டு வரனை அவளுக்குத் தருவதாகச் சொன்ன தசரதரும் தமக்கு மனமில்லாதிருப்பினும் அப்படிச் செய்யவேண்டி நேர்ந்தது.



ராமன் தகப்பன் வார்த்தையைக் காப்பாற்ற வேண்டி அன்றே தமது பத்தினி சீதாதேவியுடனும் தமது தம்பி லக்ஷ்மணனுடனும் வனத்துக்குப் புறப்பட்டார். தசரதரோ ராமன் பிரிவாற்ருமல் இறந்தார்.

பரதன் ராமனிடம் பாதுகையைப் பெறுகிறான்

பரதன் அப்பொழுது அயோத்தியில் இல்லை. தமது மாமனுடன் கேகய நாட்டுக்குப் போயிருந்தார். தூதர்கள் சென்று அவரை அழைத்து வந்தனர். அயோத்தியில் நடந்த விஷயங்களைக் கேட்டு அவர் மிக வருந்தினார். தமது அன்னையைச் சொல்லாததும் சொல்லித் திட்டினார். தமக்கு ராஜ்யம் வேண்டாமென்று மறுத்து, அந்நகரிலுள்ள பெரியோரையும், மந்திரிமாரையும், சைநியத்தையும், தனது அன்னைமாரையும் அழைத்துக் கொண்டு ராமனைத் திரும்ப அழைத்துவரக் காட்டுக்குச் சென்றார்.

ஆனால் ராமன் அதற்கு இணங்கவில்லை. தமது தகப்பனாருடைய கட்டளையை மீறமாட்டேனென்று அவர் சொல்லிவிட்டார். பரதன் அவரிடமுள்ள மரியாதைக்காக அவருடைய பாதுகையைப் பெற்று அயோத்திக்குத் திரும்பினார்.

கோசல நாட்டு அரசாட்சியைப் பரதன் நன்கு நடத்திய போதிலும், அதை ராமனுக்குப் பிரதிநிதியாக விருந்து நடத்துவதாக அவர் எண்ணினார். அதனால் அப்பதினாலு வருஷமும் அவர் ராஜாக்களுக்குத் தக்க உடை யணிவதில்லை. உணவு உண்பதில்லை. படுக்கையில் படுப்பதுமில்லை. அவர் ராமனுடைய வேலைக்காரனாகத் தன்னை நினைத்து வந்தார்.

கைகேசியின் கெட்ட ஆசை அவர் நடத்தை யால் நிறைவேறவில்லை. அண்ணன் தம்பிகள் நடந்து கொள்ளவேண்டிய முறையைப் பரதன் உலகத்தாருக்குத் தெளிவாய்க் காட்டினார்.

கேள்விகள்

1. பரதன், ராமன், இவர்கள் யார்?
2. தசரதர் என்ன செய்ய நினைத்தார்? அதைத் தடுத்தவள் யார்? ஏன் தடுத்தாள்?
3. தசரதர் ஏன் ராமனைக் காட்டுக்கு அனுப்ப இசைந்தார்?
4. காட்டுக்குச் சென்றவர்கள் யார்? அதனால் தசரதருக்கு என்னவாயிற்று?
5. அயோத்தியில் நடந்த விஷயங்களுக்குப் பரதன் என்ன சொன்னார்? என்ன செய்தார்?
6. ராமன் ஏன் அயோத்திக்கு வர மறுத்தார்? அதற்குப் பதிலாக என்ன ஏற்பாட்டை ஒப்புக்கொண்டார்?
7. ராமன் காட்டிலிருந்த காலத்தில் அயோத்தி நாடு எப்படி ஆளப்பட்டு வந்தது?
8. கோடிட்ட இடங்களில் ஒருவார்த்தை எழுதிப் பூர்த்தி செய்க :— ராமன் உத்தமனான ——— ; பரதன் உத்தமனான ——— .

குறிப்புகள்

ராஜலக்ஷணம் = அரசன் தனது நாட்டை ஆள அவசியமான குணங்கள். அவை வீரம், தைரியம், ஞானம், கொடை, ஊக்கம், நெறி முதலியனவாம்.

பட்டாபிஷேகம் — நாட்டை ஒரு புது அரசனிடம் ஒப்படைத்தல். இது நாட்டு ஜனங்களுக்கு ஒரு கொண்டாட்டமான சமயம். ஹிந்துக்கள் அச்சமயம் அரசனைப் புண்ணிய தீர்த்தங்களால் தீர்த்தமாட்டி அலங்காரம் செய்து கிரீடம் தரிக்கச் செய்வார்கள். சந்தோஷமாக எல்லோருக்கும் அன்னமளித்தும், பரிசுகள் தந்தும், காவலில் உள்ள கைதிகளை விடுத்தும் அரசன் தமது குடிகளைத் திருப்தி செய்வான்.

பாதுகை = மிதியடிச்சட்டை.

பிரதிநிதி = (ஒருவருக்குப்) பதிலாக அவர் செய்யும் காரியம் செய்பவர்.

4. ஒத்துவாழ்ந்த பஞ்சவர்கள்

உத்தர கோசல நாட்டுக்கு மேற்கே குரு நாடு என்று பெயர் பெற்ற தேசம் ஒன்று முற்காலத்தில் விளங்கியது. அதன் பிரதான நகரம் ஹஸ்தினபுரம். அந் நகரில் ஒரு சமயம் திருதராஷ்டிரன் என்றொரு அரசன் அரசாண்டான். அவன் குருடன். அவனுக்கு நூறு பிள்ளைகள் பிறந்தனர். மூத்த பிள்ளையின் பெயர் துரியோதனன். கெட்ட மனிதர்களோடு பழகிக் கெட்ட நடத்தையையே மேற்கொண்டவன். அவனுடைய நண்பர்களில் அவன் மாமன் சகுனி என்ற துஷ்டனும் ஒருவன்.

திருதராஷ்டிரனுடைய தம்பியாகிய பாண்டு ராஜனுக்கு ஐந்து பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் பெயர்பெற்ற வீரர்கள். ஆயினும் தர்ம நிலை தவருதவர்கள். அவர்களில் மூத்தவருக்குத் தர்ம புத்திரர் என்றே பெயர். அதாவது உண்மை நிலை, தர்மநிலை தவருதவர் என்றர்த்தம். அவர் வார்த்தையை அவருடைய தம்பிகள் ஒருநாளும் தட்டி நடப்பதேயில்லை.



துஷ்டனுன துரியோதனனுக்கு நல்லவர்களான பாண்டவர்களைக் கண்டால் ஆகாது. ஆதலால் அவர்களைக் கொல்ல அவன் ஏற்பாடு செய்தான். அவர்கள் அதில் தப்பிவிட்டனர். பிறகு இந்திரப்பிரஸ்தம் என்னும் நகரத்தில் வசித்து வந்த இவ் வைவரும் பேரும் கீர்த்தியும் பெற்றனர். ஒரு பெரிய யாகத்தையும் செய்தனர்.

அதனால் பொறாமை கொண்ட துரியோதனன் அவர்களை வஞ்சகமாய்த் தன் நகரத்துக்கு



தர்மபுத்திரர் சகுனியுடன் சூதாடுகிறார். வலதுகைப்புறம் இருப்பவர் பஞ்சவர்.

வரும்படி அழைத்தனன். அவர்களும் வந்தனர். துரியோதனன் சகுனியின் உதவி கொண்டு மூத்தவரான தர்மபுத்திரருடன் சூதாடினான்.

பெரியோனுன தர்மபுத்திரருக்குச் சூதாட்டத்தில் பிரியம் அதிகம். அவர் தமது பொருள், நாடு, நகரம் முதலியவற்றைப் பந்தயமாக வைத்துத் தோற்றுப் பிறகு தமது தம்பிகளையும் தம்மையுமே பந்தயமாக வைத்துத் தோற்ருர். பிறகு ஐவருக்கும் தர்மபத்தினியான திரௌபதி தேவியையும் தோற்ருர். தங்கள் அண்ணன் என்ற முறையில் சூரரான அவர் தம்பிகள் அவரைத் தடுத்துப் பேசவில்லை.

பிறகு தர்மபுத்திரர் செய்த தவருல் அவர்கள் பட்ட கஷ்டங்கள் பல. அவமானங்களும் பல. பெண்பாலாகிய திரௌபதி தேவியையே கொடியனுன துரியோதனன் மிக்க அவமானம் செய்யப் பார்த்தான். அவர்கள் பன்னிரண்டு வருஷம் காட்டிலும், ஒரு வருஷம் நாட்டில் ஒளிந்தும், வசிக்க - வேண்டியதாயிற்று. ஆயினும் தமது அண்ணன் பேச்சுக்கு மீறி அவர்கள் ஒரு பொழுதாவது நடந்ததில்லை.

கேள்விகள்

1. குருநாட்டின் பிரதான நகரம் யாது ?
2. அதன் அரசன் பெயர் என்ன ? அவருக்கு எத்தனை புத்திரர்கள் ? அவர்களில் மூத்தவன் பெயரைச் சொல்லுக. அவனுடைய குணம் எப்படிப்பட்டது ?
3. துரியோதனனுக்கு நேர் எதிர்க் குணமுடைய பெரியோன் யார் ?

4. தர்மபுத்திரன் என்றால் என்ன அர்த்தம்?

5. பாண்டவர்கள் எங்கு அரசு புரிந்தனர்?

6. அவர்கள் ஆட்சி எப்படிப் பட்டது?

7. துரியோதனன் அவர்களை அழிக்க என்ன செய்தான்?

8. சூதாட்டத்தில் யார் தோற்றனர்? என்னென்ன பந்தயமாக வைத்துத் தோற்றனர்?

9. இந்தத் தோல்வியால் பாண்டவர்கள் கதி என்னவாயிற்று?

10. அதனால் தர்மபுத்திரரிடம் அவர் தம்பிமார் வேறு விதமாக நடந்தார்களா?

குறிப்புகள்

பஞ்சவர்கள் = ஐந்துபேர். பாண்டுபுத்திரர்களைப் பஞ்ச பாண்டவர்கள், பஞ்சவர்கள் என்று அழைப்பது வழக்கம்.

சூதாட்டம் = பகடை சொக்கட்டான் முதலியவற்றை உருட்டி அதிலிருந்து கெலிப்பு, தோல்விகளைக் காண்பது.

பந்தயம் = கெலித்தவர்களுக்குத் தோற்றவர்கள் தரும் பணம், பொருள் முதலியன.

5. துறவு பூண்ட அரசகுமாரன்

இந்தியாவின் வடகிழக்குப் பாகத்தில் கபில வாஸ்து என்றொரு பட்டண முண்டு. அதில் முன்னொருகால் சித்தார்த்தர் என்றொரு அரச குமாரன் இருந்தார். அவர் நல்ல அழகும் சிறந்த ஞானமும் உடையவர். மிக்கச் செல்வமாய் வளர்ந்



தவர். இளவயதில் துக்கம் என்பது இன்னது என்று அறியாதவர். அழகிலும் குணத்திலும் சிறந்த யசோதரை என்றொரு ராஜ கன்னிகையை அவர் மணந்து அவளுடன் வாழ்ந்து வந்தார். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது.

ஆனால் அவர்களையும் தமது ராஜபோகத்தையும் அவர் விட்டார். அதற்குக் காரணம் அவர் கண்ட துக்ககரமான காட்சிகளே. பட்டணத்தைச் சுற்றி வருகையில் அவர் ஒரு சமயம் வியாதியால் வருந்திய ஒருவனைப் பார்த்தார். அவர் மனம் கிலேசப்பட்டது. மனிதன் எப்பொழுதும் ஆரோக்கியத்துடன் இருக்க முடியாதென்று அவர் அறிந்தார்.

மற்றொரு வேளையில் அவர் ஒரு தள்ளாத கிழவனைப் பார்த்தார். அதனால் அவருடைய மனம் கலங்கியது. இம் மனித உடம்பே அழியுமென்று அவர் கண்டார்.



சித்தார்த்தர் அரண்மனையைவிட்டுப் போகிறார்

சித்தார்த்தருடைய சந்தோஷமான வாழ்வு போயிற்று. மனித வாழ்வு துக்கமென அவர் தீர்மானித்தார். அத் துக்கத்தை விலக்க அவர் வழி தேடினார்.

தன் பெண்சாதியையும் மைந்தனையும் அவர் விட்டகன்றார். தமக்கு ராஜ்யம் வேண்டாமென்று அதையும் விட்டார். ஏனெனில் அக்காலத்தில் இருந்த இந்துமத ஆசாரியர் இவ்வுலக ஆசையால் துக்கம் வருகிறதென்று சொல்லினர்.

இவ்வுலக ஆசையை விட்டு ரிஷிகளைப்போல் அவரும் தபசு செய்தார். அதனால் மேலுலகம் தமக்குக் கிடைக்குமென்று அவர் எண்ணினர்.

ஆனால் துக்கத்தினிடம் உண்டான பயம் அவரை விட்டுப் போகவில்லை. இவ்வுலக ஆசைக்குப் பதிலாக இறந்தபின் பேருலகம் கிடைக்கவேண்டுமே என்ற ஆசை அவரை வருத்தியது.

ஒரு நாள் அவர் ஒரு ஆல விருக்ஷத்தின் அடியில் உட்கார்ந்து சிந்தனை செய்தார். அப்பொழுது அவருக்கு ஒரு புதிய எண்ணம் உண்டாயிற்று. இவ்வுலக ஆசையைப்போல மேலுலக ஆசையும் துன்பம் தரக்கூடியதென்று அவருக்குப் பட்டது. அப்பொழுது எல்லா ஆசையையும் விட்டார். அவர் மனது அமைதியை அடைந்தது. அவர் இந்த ஞானத்தைப் பலருக்கும் போதித்தார். அவர்கள் அவருடைய சிஷ்யர்கள் ஆனார்கள். அவர்கள் அவரை 'புத்தர்' என்று அழைத்தனர். புத்தர் என்றால் ஞானி என்று அர்த்தம்.

எல்லோரும் ஆசையை வெறுக்க வேண்டுமென்றும், ஒழுங்காய் நடக்கவேண்டுமென்றும் அவர் போதித்தார். அவர் போதனை புத்தமதம் என்றொரு புதிய மதத்துக்கு அடிப்படையாயிற்று.

கேள்விகள்

1. சித்தார்த்தர் யார்? அவர் இளமையைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?
2. அவர் துறவு பூண்டதற்குக் காரணம் என்ன? மனித வாழ்வில் உள்ள துக்கத்தைப் போக்க அவர் என்ன செய்தார்?

3. ரிஷிகள் எதற்காகத் தபசு செய்கின்றனர்?

4. தபசில் ஏன் சித்தார்த்தருக்கு நம்பிக்கை பிறக்கவில்லை?

5. துக்கம் எதனால் உண்டாகிறதென்று அவர் கண்டார்?

6. புத்தர் என்னும் பதத்துக்கு அர்த்தம் என்ன? புத்தரின் போதனைகள் என்ன?

குறிப்புகள்

சித்தார்த்தர் = விரும்பியவற்றை அடைந்தவர். அரசகுமாரனாதலால் சகல போகங்களும் அவருக்குச் சித்தித்தன.

ஆசை = கிடைக்காத பொருள் கிடைக்கவேண்டுமென்னும் எண்ணம்.

6. கோர்டியஸ் போட்ட முடி

இந்தியா ஆசியாக் கண்டத்தின் மத்தியில் தெற்கிலுள்ள ஒரு தேசம். அதற்கு மேற்கில் இக் கண்டம் வெகுதூரம் வரையில் பரவியிருக்கின்றது. ஆசியாவின் மேற்குக் கோடியின் வடபாகத்தில் அதை ஒட்டி யிருப்பது ஐரோப்பாக் கண்டம். தெற்கில் அதை அடுத்திருப்பது ஆப்பிரிக்காக் கண்டமாம்.

ஐரோப்பாவின் தென்கிழக்குக் கோடியில் மாஸிடன் என்றொரு சிறிய நாடு இருந்தது. அங்கு ஒரு கால் அலெக்சாந்தர் என்றொரு அரசன் ஆண்டனன். அவன் சிறந்த வீரன். எட்டிய

வரையில் இந்தப் பூமியை ஜயித்து அதை ஆள வேண்டுமென்று அவன் ஆசைப்பட்டான். அதற்காக வீரர்கள் அடங்கிய ஒரு பெரிய சைனியத்தைத் தயாரித்தான்.

அச்சமயம் சோதிடர் ஒருவர் "கோர்டியஸ் என்றொரு அரசன் ஒரு வடகயிற்றைக் கொண்டு ஒரு ரதத்தின் நுகத்தடியை குதிரையின் கழுத்தில் வைக்கும் நுகத்துடன் வெகு சாமர்த்தியமாய்க் கட்டியிருப்பதை அவிழ்த்தவரே ஆசியாக் கண்டத்தை ஜயித்து ஆள முடியு" மென்று சொன்னார். அதை அவிழ்க்கப் பாடுபட்டவர்கள் பலர். ஆனால் ஒருவரும் அதை அவிழ்க்க முடியவில்லை.

தான் திக்விஜயம் செய்ய எத்தனித்தபோது இந்தச் சோதிடம் சகுனத் தடையா யிருக்குமே யென்று அலெக்சாந்தர் கவலைப்பட்டான். பிறகு அந்த முடியைப் பார்த்ததும் அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. தனது வாளை யுருவி அதை ஒரே வெட்டாய் வெட்டினான். முடிந் திருந்த முடிச்சு அவிழ்ந்துவிட்டது. எல்லோரும் அதைப் பார்த்து ஆச்சரியப் பட்டனர். அலெக் சாந்தரே பூமண்டலத்தை ஜயிக்கத் தகுதியுள்ள வன் என்று தீர்மானித்தனர்.

அலெக்சாந்தர் ஆப்பிரிக்காவின் வட பாகத்தை வென்று பிறகு ஆசியாப் பக்கம் திரும் பினான். தனது வீரத்தாலும், தைரியத்தாலும்

தனது சேனையை நடத்திவந்து ஆசியாவில் பல அரசர்களைத் தோல்வியடையச் செய்தான்; கடைசியாய் இந்தியாவின் வடமேற்குக் கோடியை அவன் அடைந்தான். அங்கும் ஜயம் பெற்றுப் பிறகு தனது நாட்டை நோக்கிச் சென்றான்.

அலெக்சாந்தர் வந்த வழியில் பெரிய மலைகள் பல இருந்தன. நீரில்லாத வனாந்தரங்கள் இருந்தன. சாலை யென்பதே கிடையாது. அத் தடைகளை யெல்லாம் அவன் லக்ஷியம் செய்யவில்லை.

ஆங்காங்கு பெரிய சேனைகளைத் துணையாகக் கொண்டு பல அரசர்கள் அவனை எதிர்த்தனர். அவர்களிடமெல்லாம் ஜயம் பெற்றான். ஆ! இவ்வீரனின் திறம்தா னென்ன!

கேள்விகள்

1. அலெக்சாந்தர் ஆண்ட சிறு நாடு எது?
2. அவன் விருப்பம் என்ன? அதற்காக அவன் செய்த முயற்சி என்ன?
3. கோர்டியஸ் போட்ட முடி யாது? அதைச் சார்ந்த சோதிடம் என்ன?
4. அலெக்சாந்தர் அம் முடியை எப்படி அவிழ்த்தான்?
5. அலெக்சாந்தர் ஜயித்த நாடுகள் எந்தக் கண்டத்தில் உள்ளன?
6. அலெச்சாந்தர் எவ்வாறு பெரியோன் என விளக்குக?

குறிப்புகள்

கண்டம் = ஒரு பூமி படத்தைப் பார்க்க. உலகத்தில் உள்ள தரை ஆறு கண்டங்களாகப் பிரிக்கப்பட்டு உள்ளது. அவையாவன :— ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா என்பனவாம். அவற்றை உன் படத்தில் கண்டுபிடி.

தேசம்=ஒரு கண்டததின் முக்கிய பிரிவுகளில் ஒன்று. இந்தியா ஆசியா கண்டத்தில் ஒரு தேசம்.

சைனியம் = சண்டை இடுவதற்கு என்று பழக்கப்பட்டவர்களில் அநேக ஆயிரம்பேர் அடங்கிய ஒரு கூட்டம். அவர்கள் தற்காலத்தில் துப்பாக்கி, பீரங்கி முதலியன சுடவும், ஒழுங்காய் அவர்கள் பத்தி குலையாமல் தலைவர் சொல்லும் உத்தரவைத் தட்டாது சண்டை செய்யவும் பழக்கப்படுகிறார்கள். அம்மாதிரி பழக்கப்பட்ட ஒருவனுக்கு சிப்பாய் அல்லது போர்வீரன் என்று பெயர்.

திக்கு விஜயம் = திசைகளை வெல்வது; என்றுவ், பல திசைகளிலும் உள்ள தேசங்களை ஜயிப்பது.

செயல்

உலகப்படம் ஒன்று வரைந்து அதில் கண்டங்களைக் குறிக்க.

7. தான் செய்த தவறு அறிந்த அரசன்

கங்கா நதியின் அருகில் முற்காலத்தில் பாடலீபுரமென்று பிரசித்தி பெற்ற ஒரு நகரம் உண்டு. அதைச் சுற்றியுள்ள மகத நாடு சீரும் சிறப்பும் உடையது. ஆகையால் அந்நகரில் ஆண்ட அரசர் பலர் தமது அருகிலுள்ள நாடுகளை ஜயித்து பெரிய சக்கரவர்த்திகளாக விளங்கினர். அவர்களில் சந்திரகுப்த மௌரியர் என்றொரு பேரரசர் இருந்தார். அவர் வட இந்தியா முழுவதையும் ஜயித்து ஆண்டார். அவர் மகன் தென் இந்தியாவின் வட பாகத்தை ஜயித்தார்.

சந்திரகுப்த சக்கரவர்த்தியின் பேரனுக்கு அசோக சக்கரவர்த்தி என்று பெயர். இவர் பெரியோரென உலகமெல்லாம் அறியும். புத்தர் என்றொரு ஞானி ஒரு புதிய மதத்தை உண்டாக்கினரல்லவா? அதை அசோகர் மகத நாட்டுக்கு நாலு திக்கிலும் உள்ள சமீபமான நாடுகளிலும் தூரத்திலுள்ள நாடுகளிலும் போதிக்கப் பல பெரியோரை

அனுப்பி ஏற்பாடு செய்தார். அங்கெல்லாம் புத்த மதம் பரவிற்று.



ஆயினும் இவர் பட்டத்துக்குவந்ததும் தனது தகப்பனையும் பாட்டனையும் போலத் தானும் அயல் அரசரைத் தோற்பித்துப் புது நாடு பிடிக்கஎண்ணி னர். பெரிய சைந்யத்தைச் சேர்த்துக்கொண்டு

தமது நாட்டின் தென்கிழக்கிலுள்ள கலிங்க நாட்டைக் கவர ஏற்பாடு செய்தார். அந் நாட்டரசனது சேனையுடன் சண்டையிட்டு வெற்றி பெற்றார்.

அந்த யுத்தத்தில் லக்ஷம் பேர் மாண்டனர். கை போனவர்களும் கால் போனவர்களும் காயம் பட்டவர்களும் மிகப் பலர். தங்களுக்குள்ள பொருளெல்லாம் போய்க் கஷ்டப்பட்டவர் பலர். இதையெல்லாம் அசோகர் மனவருத்தத்துடன் கவனித்தார்.

அவ்வளவு கஷ்டத்துக்கும் தானே காரணம் என்று அவர் உணர்ந்தார். புதிய நாட்டைக் கொள்ள அவர் ஆசைப்பட்டதால் அவ்வளவு கஷ்டம் ஏற்பட்டதென்று அவர் அறிந்தார். அப்பொழுது புத்த பகவான் கற்பித்த 'ஆசையால் துக்கம் உண்டாகிறது' என்ற விஷயம் அவருடைய மனதில் பதிந்தது.

அது முதல் அவர் புது நாட்டுக்காக யுத்தம் செய்வதை விட்டார். தமது அரண்மனையில் மாமிசத்துக்காக ஜந்துக்களைக் கொல்வதையும் நிறுத்தினார். புத்த பகவான் மதப்படி நடந்தார்.

இவற்றை யெல்லாம் எழுதிக் கலிங்கத்தில் ஒரு பாறையில் அதைச் செதுக்கும்படி செய்தார். அரசனாயினும் தான் செய்த தவறை எல்லோரும் அறியச் செய்தார். இவர் அரசர்களில் சிரேஷ்டர் அன்றோ!

கேள்விகள்

1. சந்திரகுப்த மௌரியர் இந்தியாவின் எப்பாகத்தில் ஆண்டார்? அவருடைய பெயர் பெற்ற பேரன் யார்?

2. அந்த நல்ல பெயர் அவருக்கு எவ்வாறு கிடைத்தது?

3. பட்டத்துக்கு வந்ததும் அவர் எந்த நாட்டைப் பிடித்தார்?

4. அந்த நாட்டுடன் சண்டையிட்டதில் ஜனங்களுக்கு நேர்ந்த கஷ்டங்கள் என்ன?

5. அக் கஷ்டங்கள் யாரால், எதனால் உண்டானதாக அறிந்தார்?

6. அப்பொழுது அவர் மனதில் பட்ட விஷயம் என்ன? அதன் பேரில் அவர் என்ன சபதம் செய்துகொண்டு நடந்தார்?

7. அசோகர் சிறந்த அரசர் என்று எப்படிச் சொல்லலாம்?

குறிப்புகள்

மௌரியர் = முரை வம்சத்தில் உண்டானவர். முரை என்பவள் சந்திரகுப்தரின் தாய் என்பர்.

சக்கரவர்த்தி = அரசருக்கு அரசர்; என்றால், பல சிற்றரசர்களை ஆளும் பேரரசர். நமது ஆறாவது ஜ்யார்ஜ் ஓர் சக்கரவர்த்தி அல்லவா?

யுத்தம் = அரசர்களுக்குள் நடக்கும் பெரும் சண்டை. நீண்டகாலம் நடப்பது. இருபத்து நான்கு வருஷங்களுக்கு முன் நடந்த மஹா யுத்தத்தில் ஐந்து வருஷகாலம் பல இடங்களில் பல சண்டைகள் நடந்தன.

பாறையில் செதுக்கு; நம் தேசத்தில் பழையகோயில் களில் சுவர்களில் எழுத்துக்கள் தெரிகின்றன அல்லவா! அவைகள் கோயில்களைக் கட்டுவதற்கு முன் கல் தச்சர்களால் அக் கற்களில் செதுக்கப்பட்டன. அதே மாதிரி பாறையிலும் இந்த அக்ஷரங்கள் செதுக்கப்பட்டன.

செயல்

இந்தியா படம் ஒன்று வரைந்து அதில் இப்பாடத்தில் கொடுக்கப்பட் டிருக்கும் அசோகர் ஆண்ட நாட்டைக் குறிக்க.

8. பிறர் கஷ்டத்தைப் பார்த்துச் சந்தோஷித்த கொடியோன்

இந்தியாவின் வடக்கிலும் மேற்கிலும் பெரிய மலைகள் இருக்கின்றன. அயல் தேசத்தார் தமது நாடுகளிலிருந்து அதிகமாக இங்கு வராமல் அவைகள் தடுக்கின்றன.

ஆனால் அவைகளின் நடுவில் அவற்றைத் தாண்டிவரக் கூடிய வழிகள் சில உண்டு. அவ்வழி கள் மலைகளின் நடுவே உள்ள பள்ளத்தாக்குகளின்

வழியாக வரும். அவற்றுக்குக் கணவாய்கள் என்று பெயர்.

அப்படி இந்தியாவின் வடமேற்கில் உள்ள கணவாய்கள் வழியாய் அதற்கு அப்பாலுள்ள நாடுகளிலிருந்து பல முரட்டு ஜாதியார் இத்தேசத்தின் மேல் படையெடுத்து வந்தனர்.

படையெடுப்பதென்றால் என்ன? ஒரு நாட்டிலுள்ள ஒரு அரசன் தன் படையைச் சேர்த்துக் கொண்டு அன்னிய நாட்டுக்குச் சென்று அதை வெல்லப் பார்ப்பது படையெடுப்பாம். அலெக்சாந்தர் மாஸிடனை விட்டுப் பல தேசங்களுக்குத் தனது சேனைகளுடன் சென்றான். அவன் அத் தேசங்களைப் படையெடுத்தான். அம்மாதிரியே அசோக சக்கரவர்த்தி கலிங்க நாட்டின்மீது படையெடுத்தார்.

அலெக்சாந்தர் நாகரிகம் படைத்த ஒரு அரசன். அசோகரும் அப்படித்தான். ஆயினும் இவர்கள் படையெடுத்த பொழுதே படையெடுக்கப் பட்ட நாட்டினர் வெகு கஷ்டத்துக்கு ஆளாயினர்.

நாகரிகமில்லாத முரட்டுச் சாதியாரிடம் தயவு, நன்மை யென்பதே கிடையாது. தாம் போகுமிடங்களில் ஆண் பெண் அடங்க ஒருவரும் பாக்கியில்லாது ஊரூராய் நகரம் நகரமாய் நாசம் செய்யும் வழக்கமுள்ள சாதியார் இருந்திருக்கிறார்கள்.

சுமார் ஆயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முன் 'வெள்ளை ஹூணர்' என்றொரு முரட்டு மனிதர் வடமேற்குக் கணவாய் வழியாய் இந்தியாவின் மேல் படையெடுத்தனர். அவர்கள் தாம் வந்த வழியில் உள்ள கிராமங்களில் செய்த அநியாயம் சொல்லிமுடியாது. யாரைக் கண்டாலும் அவர்கள் கொன்று விடுவார்கள். ஊர் ஊராய்ச் சூறையிட்டு எங்கும் நெருப்புவைத்துக் கொளுத்தி விடுவார்கள்.

அவர்கள் பார்ப்பதற்கு அவலக்ஷணமாய் இருந்தனர். அவர்களுடைய கீச்சுக் குரல் காதைத் துளைக்கும். அவர்களுடைய நடத்தை அருவருப்பாயிருக்கும்.

இந்தச் சாதியாரின் அரசன் நமது தேசத்தில் வடமேற்கு நாடுகளை வென்று அங்கு அரசாண்டான். அவன் மகன்! மிகிரகுலன் என்பவன் காச்மீர மென்னும் அழகிய மலைநாட்டை ஆண்டு வந்தான். அவன் அங்கு யானைகளைச் செங்குத்தான மலைக் குன்றுகள் மேலேற்றி, அங்கிருந்து அவைகளைக் கீழே தள்ளச் சொல்லுவான். சாகப் போகிறோமென்று பயந்து அப்பெரிய மிருகங்கள் ஓலமிட்டு அலறும் சத்தததைக் கேட்பதில் இந்தக் குரூரமான அரசனுக்கு மிகச் சந்தோஷம் என்று சொல்லி யிருக்கிறார்கள்.

குற்ற மற்ற மிருகங்களைக் கொல்லும் இவ்வரசன் மனிதரையா விடுவான்?

கேள்விகள்

1. இந்தியாவின் வடக்கிலுள்ள மலை எது? (வடமேற்கிலுள்ள முக்கியமலை ஹிந்துகுஷ் எனப்படும்.)
2. அம்மலைகளைத் தாண்டிவர என்ன சாதனங்கள் உண்டு?
3. படை யெடுப்பது என்றால் என்ன? இந்தியாவை வடமேற்கிலிருந்து படையெடுத்த உனக்குத் தெரிந்த அரசன் யார்?
4. முரட்டு ஜாதியார் தாம் படையெடுத்து வென்ற நாட்டை என்ன செய்வார்கள்?
5. இந்தியாவை 1500 வருஷங்களுக்கு முன் படையெடுத்தவர் யார்?
6. அவர்கள் செய்த அனியாயம் யாது? அவர்கள் அரசன் ஆண்ட நாடு எது?
7. அவ்வரசன் பொழுது போக்குக்காகச் செய்த குரூரமான செயல் யாது?

குறிப்புகள்

கணவாய்=உயர்ந்த மலைகளின் இடையில் ஏற்படும் பள்ளமான வழி. அவை அவ்வழியாய் வரும் ஆற்றை ஒட்டி யிருக்கும். இந்தியாவின் வடமேற்குக் கோடியில் வெகு உயரமான பல மலைகள் உள்ளன. அட்லாஸ் படம் பார்த்துத் தெரிந்துகொள்ளுக.

9. கயையில் ஒரு புதிய மடம்

புத்தருக்கு ஞானோதயமானது ஒரு ஆல விருக்ஷத்தினடியில் என்று படித்தீர்களல்லவா? அந்த மரம் கயை என்னும் பட்டணத்தில் உள்ளது. உலகெங்கு மிருந்து புத்த மதத்தார் அங்கு வந்து அந்த இடத்தைத் தரிசித்துப் போவது அக்காலம் முதல் வழக்கமா யிருக்கிறது.

இக்கதையில் சொல்லப்படும் விஷயங்கள் நடந்த காலத்தில் வட இந்தியாவில் புத்த சமயத்தார் வெகு குறைவாய் இருந்தனர். இந்து மதத்தினர் வெகு அதிகமா யிருந்தனர்.

அப்பொழுது இந்தியாவுக்குத் தெற்கிலுள்ள சிம்மளத் தீவிலிருந்து சில பௌத்தர் கயைக்கு யாத்திரை செய்தனர். ஊருக்குத் திரும்பிவந்து கயையில் தமக்குத் தங்க இடமில்லை யென்று அவர்கள் தமது அரசரிடம் சொல்லினர்.

அவ்வரசர் பெயர் மேகவர்ணன். அவர் உடனே தூதுவர் இருவரைப் பலவித ரத்னங்களுடனும் வேறு வெகுமதிகளுடனும் பாடலிபுரத்துக் கனுப்பினர். அப்பொழுது அந்நாட்டை யாண்டவர் சமுத்திரகுப்தன் எனப் பெயர்பெற்ற ஒரு அரசர். அவர் வட இந்தியாவின் பெரும் பாகத்தை ஆண்டு வந்தார். தென் இந்தியாவில் திக்விஜயம் செய்ய வெண்ணிப் பெரும் படையை

யழைத்துக்கொண்டுபல நாடுகளை ஜயித்து வெற்றி பெற்றார்.

சிம்மளத் தூதர்கள் சமுத்திர குப்தனிடம் சென்று காணிக்கைகளைக் கொடுத்து கயையில் ஒரு பெரியமடம் கட்டிக்கொள்ள உத்தரவு கேட்டார்கள்.

விக்கிரமாதித்தர்

சமுத்திரகுப்த மகாராஜா இந்து மதத்தினர். ஆயினும் வேறு மதங்களிடம் அவருக்கு வெறுப்பில்லை. ஆகையால் அவர் அம்மாதிரி மடம் கட்ட உத்தரவு தந்தார். மேகவர்ணராஜனும் ஆல விருக்ஷத்தினருகில் மூன்று உபரிகைகளுடைய பெரிய மடமொன்று கட்டினார்.

அதில் ஆயிரம் பெயர் தங்கியிருக்க இடமிருந்தது. அங்கு ஒரு கோயிலில் வெள்ளியையும் தங்கத்தையும் சேர்த்து உருக்கி வார்த்த புத்தர் விக்கிரகம் ஒன்று இருந்தது. அதில் விலையுயர்ந்த

ரத்னங்கள் அதிகமாய் இழைக்கப்பட்டிருந்தன. இந்த மடம் கட்டி முடிந்து சில நூற்றாண்டுகள் கழித்துங்கூட இங்கே சிம்மளத்தீவிலிருந்து வந்த



யாத்திரிகர்களுக்குத் தங்கியிருக்க வசதி கிடைத்த தென்று சொல்லப்பட்டிருக்கிறது.

கேள்விகள்

1. சமுத்திரகுப்த மகாராஜா ஆண்ட ராஜ்யம் எது? (வட இந்தியா.) அவர் செய்த பெருங்காரியம் எது?
2. அவர் நாட்டில் புத்த மதத்தினர் தமது குருவை வணங்க வரும் பட்டணம் எது? ஏன் அவர்கள் அப்படி அங்கு வந்தனர்?
3. சமுத்திரகுப்தர் நாளில் அங்கு வந்த புத்த மதத்தினருக்கு என்ன குறைவு ஏற்பட்டது?
4. அக்குறையைத் தீர்க்க முன்வந்தவர் யார்? அவர் என்ன செய்ய உத்தேசித்தார்? யாரை அனுப்பினார்?
5. சமுத்திரகுப்தர் மதம் என்ன? அவர் ஏன் சிம்மளத் தூதர்களுக்கு மடம் கட்ட உத்தரவு தந்தார்?

6. பௌத்த மடத்தின் பெருமையை உரைக்க.

7. சற்காலத்தில் யாத்திரிகர்கள் தங்க நமது தேசத்தில் என்ன வசதிகள் உண்டு?

குறிப்புகள்

ஞானோதயமானது = உண்மை விளங்க ஆரம்பித்தது.

உலகெங்கும் = ஆசியா கண்டத்தின் மேற்கு, வடக்கு, வடகிழக்குப் பாகங்களில் புத்தமதம் பரவியிருந்தது.

சிம்மளம் = லங்கை, சிலோன் என்று பெயர்பெற்ற தீவு.

10. காவிரியாற்றின் அணை

காவிரியாறு குடகில் உற்பத்தியாகி, தென் இந்தியாவில் குறுக்கே ஓடித் தஞ்சாவூர் ஜில்லாவில் தஞ்சைக்கு மேற்கில் பல சிற்றாறுகளாகப் பிரிகிறது. இச் சிற்றாறுகள் அந்த ஜில்லாவில் எங்கும் பாய்ந்து கடைசியாய்க் கடலை அடைகின்றன.

நமது நாட்டில் ஒரு இடம் நீர்வளம் நிரம்ப விருந்தால் அவ்விடம் விளைவு மிகுந்து விளங்கு கிறது. காவிரியாற்றின் ஜலத்தால் தஞ்சாவூர் வளம் பொருந்திய இடமாயிற்று.

ஆனால் அது எப்பொழுதும் அப்படியிருந்த தில்லை. சுமார் ஆயிரம் வருஷத்துக்கு முன் அவ் வாற்றின் ஜலம் இரண்டொரு கிளைகளாக மாத்திரம் பிரிந்து இருந்தது. அப்பொழுது அதன் ஜலம்

அவ்வளவாய் நீர்ப்பாசனத்துக்கு உதவுவதில்லை. அதனால் அதைச் சீர்திருத்த முயற்சி செய்த அரசன் ராஜராஜ சோழன் என்பவனும்.

இவ்வரசன் தமிழ் நாட்டின் வடபாகத்தை அநேக ஆயிர வருஷமாய் அரசாண்டு வந்த சோழ ராஜவமிசத்தைச் சேர்ந்தவன். இவ்வரசன் மிகப் பெரிய வீரன். பல நாடுகளை வென்று அவற்றை ஆண்டு வந்தான். தஞ்சாவூரே அவனுடைய பிரதான நகரம். அங்கு மிகச் சிறந்த ராஜ ராஜேஸ்வரம் என்று ஒரு பெரிய கோயிலைக் கட்டினான். அக்கோயில் இப்பொழுதும் அங்கே இருக்கின்றது.

மேலும் அந்நாடு முழுதும் வயல்களுக்கு ஜலம் பாய்ந்து அது செழிக்கவென்று தஞ்சையிலிருந்து மேற்கே சுமார் பன்னிரண்டுமைல் தூரத்தில் அவ்வாற்றுக்குக் குறுக்கே ஒரு அணை கட்டினான். காவிரியின் தெற்குக் கிளையை அடைத்து அதிலுள்ள ஜலம் பல சிற்றாறுகளில் ஓடும்படி செய்தான். அந்த அணை இப்பொழுதும் இருந்து வருகிறது. அவருக்குப்பின் வந்த அரசர்களில் பலர் இக்கிளை ஆறுகளினின்றும் பல சிற்றாறுகளையும் வெட்டினர். அவ்வாறுகளில் வரும் வண்டல் அந்நாட்டிலுள்ள நிலங்களுக்கு எருவாகிறது. சூரியவெப்பமும் ஜலவசதியும் நல்ல விளைவைத் தருகின்றன.

இதனால் நமது நாட்டுப் பழைய அரசர் இம் மாதிரி பாலங்கள் கட்டுவதில் அநேக நூற்றாண்டு களுக்கு முன்னரே பேர்பெற்றவரா யிருந்தனர் என்பது நன்றாய் விளங்குகின்றது.

கேள்விகள்

1. காவிரியாற்றின் வளம்பெற்ற நாடு எது ?
2. என்ன ஏற்பாட்டினால் அதற்கு அவ்வளம் வந்தது ?
3. அவ்வணைகட்ட ஏற்பாடு செய்த அரசன் யார் ? அவன் பிரதான பட்டணம் யாது ?
4. அவன் கட்டின கோவில் எங்கே உள்ளது ? அணை எங்கே உள்ளது ? அவன் எவ்வமிசத்தைச் சார்ந்தவன் ?
5. நமது நாட்டில் பயிர் செழிக்க அவசியமானவை என்னென்ன ?

குறிப்புகள்

நீர்ப்பாசனம் = விளை நிலத்துக்குத் தண்ணீர் பாயச் செய்யும் ஏற்பாடு.

செயல்

காவிரியாறு பல கிளைகளாகப்பிரிந்த படத்தைப் பார்த் தெழுதுக. அக் கிளைகளின் சிலவற்றின் பெயர்களையும் எழுதுக.

11. சகோதரியைக் காப்பாற்றியது

வட இந்தியாவில் சுமார் ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன் கனோஜ் என்றொரு நாடிருந்தது. அதில் ஹர்ஷர் என்றொரு அரசன் ஆண்டு வந்தார். இவர் சிறந்த வீரர். பரதன் ராமனிடம் இருந்ததுபோல் ஹர்ஷர் தமது அண்ணனிடமும் சகோதரியிடமும் அன்பு வைத்திருந்தார்.



அவர் அண்ணனுக்கு ராஜ்யவர்த்தனன் என்று பெயர். தங்கைக்கு ராஜ்யஸ்ரீ என்று பெயர். அவர் தகப்பன் இறந்தபோது ராஜ்ய வர்த்தனன் பட்டத்துக்கு வந்தார். ஆனால் உடனே அவர் சத்துருக்களுடன் சண்டைக்குப் போக நேர்ந்தது. அப்போது வங்கநாட்டரசன் சசாங்

கன் என்பவனுடைய வஞ்சனையால் ராஜ்யவர்த்தனன் கொல்லப்பட்டார். ராஜ்யஸ்ரீயின் புருஷனும் இறந்தான்.

அப்பொழுது ராஜ்யஸ்ரீ சத்துருக்களிடமிருந்து தப்பிக் காட்டில் ஒளிந்துகொண்டாள். இந்த சமாசாரம் ஹர்ஷருக்கு எட்டியது. துக்கமும் கோபமும் மேலிட, அவர் உடனே அச் சத்துருக்களைத் தேடிச்சென்று அவர்களை யுத்தத்தில் வென்றார். பிறகு தன் சகோதரியைத் தேடிக் காட்டில் எங்கும் அலைந்து பார்த்தார். கடைசியாய் அங்குள்ள வில்லவர் என்ற வேட ஜாதியாரிடம் அவள் ஒளிந்திருப்பதாகக் கேள்வியுற்றார். அங்கு அவளைத் தேடிக்கொண்டு சென்றார்.

ராஜ்யஸ்ரீ தன்னைச் சத்துருக்கள் எப்படியும் பிடித்துவிடுவாரென்று பயந்தாள். மேலும் தன்னைக் காப்பவர் ஒருவருமில்லையென்று நினைத்தாள். ஆகையால் ஏக்கம் பிடித்து, மானத்துடன் பிராணனை விடுவதே நலமென நினைத்தாள்.

அக்கினியை வளர்த்து அதைச் சுற்றிவந்து அதில் விழ இருந்தாள். அத்தருவாயில் ஹர்ஷர் அங்குவந்து சேர்ந்தார். ராஜ்யஸ்ரீ சகோதரனைக் கண்டு உயிர் தப்பினாள்.

அதுமுதல் அவ்விருவரும் ஒரு மனதுடையவராய் இருந்தனர். ஹர்ஷர் அயல் நாடுகளின்

மீது படையெடுத்து அவற்றை ஜயித்துப் பெரிய பிரதேசத்தை ஆண்டனர். ஆயினும் சகல காலங்களிலும் தன் சகோதரி துணையில்லாமல் அவர் ஒன்றும் செய்யத் துணிவதில்லை.

கேள்விகள்

1. ஹர்ஷர் அரசாண்ட நாடெது? மகத ராஜ்யத்துக்கு எந்தப் பக்கத்தில் உள்ளது? அவர் குணாதிசயங்கள் என்ன?
2. அவருக்குப் பட்டம் எவ்வாறு கிடைத்தது?
3. அவரது தமக்கை யார்? அவளுக்கு நேர்ந்த ஆபத்து என்ன?
4. ஹர்ஷர் அப்பொழுது என்ன செய்தார்?
5. ராஜ்யஸ்ரீ சத்துருக்கள் கையிலிருந்து தப்பி எங்கு ஒளிந்து கொண்டாள்? அவளை ஹர்ஷர் தேடிச் சென்றபொழுது அவள் என்ன நிலைமையில் இருந்தாள்?
6. பிற்காலத்தில் ஹர்ஷர் அவளை எப்படி நடத்திவந்தார்?

12. அராபியாவில் உதித்த நபி

ஆசியாவின் தென்மேற்கில் அராபியா என்று ஒரு தேசம் இருக்கின்றது. அது மிகப் பெரிய தேசம். ஆயினும் அது எங்கும் மழையில்லாது உலர்ந்த மணற்காடா யிருக்கிறது. ஆகையால் அங்கு ஜனங்கள் மிகக் கொஞ்சம்.

அம்மாதிரியான நாட்டு ஜனங்கள் தங்கள் ஜீவனத்தைக் கஷ்டப்பட்டுச் செய்யவேண்டி வரும். ஆகையால் அவர்கள் தேகபலமும் விடா முயற்சியும் உடையவர்களா யிருப்பார்கள்.



அந்நாட்டில் வேகமாய் ஓடும் திறமையுள்ள அழகிய குதிரைகள் உண்டு. அராபியர் தமது குதிரைகளை மிகப் பக்ஷமாக வளர்ப்பார்கள். தமது குதிரைகள்மேல் ஏறி எங்கும் வேகமாகப் போவார்கள்.

அந் நாட்டில் சுமார் ஆயிரத்து இருநூற்று ஐம்பது வருஷங்களுக்கு முன் மெக்கா என்னும் பட்டணத்தில் ஒரு மஹான் அவதரித்தார். அவர் பெயர் முகம்மது. இளம் பிராயத்திலேயே அவர் தகப்பனை இழந்தார். அப்பொழுது அவருடைய

மாமன் அவரை வளர்த்து வந்தார். அன்னவர் ஒரு வியாபாரி. ஒட்டகங்களில் சாமான்களை ஏற்றி அயல் நாடுகளுக்குக் கொண்டுபோய் அங்கு அவற்றை விற்பனை செய்வார். அப்போது முகம்மது அவருடன் கூடச் செல்வதுண்டு. இப்படி அவர் பல தேச அனுபவம் பெற்றார்.

அக்காலத்தில் அராபியர் பல தெய்வங்களைத் தொழுது வந்தனர். முகம்மது ஒரு ஞானி. ஆகையால் அவர், "கடவுள் ஒருவரே; எல்லோரும் அவரையே தொழல் வேண்டும்," என்று எல்லோருக்கும் போதித்தார். மேலும் கடவுளின் விருப்பத்தை சாதாரண ஜனங்களுக்கு அநேக ஞானிகள் பல சமயத்தில் தெரிவித்து இருக்கின்றனர். அவர்களுக்கு நபி என்று பெயர். அவர்களில் தாமே சிரேஷ்டமான நபிகள் என்று சொன்னார். அராபியர் அவரை நம்பினர். அவர் போதித்த மதம் முகம்மதிய மதம். அது மேற்கு ஆசியாவிலும் மத்திய ஆசியாவிலும் பரவிற்று.

கேள்விகள்

1. அராபியா தேசம் எங்குளது? அது எப்படிப்பட்ட நாடு? அங்குள்ளார் எப்படிப்பட்டவர்கள்? அங்கு கிடைக்கும் சிறந்த மிருகம் யாது?
2. அத்தேசத்தில் அவதரித்த மஹான் யார்?
3. அவருக்குப் பல தேச அனுபவம் கிடைத்த தெப்படி?

4. அவர் போதித்த மதம் யாது? அதன் முக்கிய கொள்கை என்ன?

5. அவர் மதபோதம் செய்யுமுன் அராபியர் என்ன செய்தனர்?

13. அவன் சத்தியத்துக்குக் கட்டுப்படவில்லை

வட இந்தியாவில் பஞ்ச பாண்டவரின் தலைநகர் இந்திரப் பிரஸ்தம் என்று படித்திருக்கிறீர்கள் அல்லவா? அந்நகர் அழிந்த பலநூறு வருஷங்களுக்குப் பிறகு அதன் அருகில் டில்லி என்று ஒரு பட்டணம் ஏற்பட்டது. அதில் எழுநூற்று ஐம்பது வருஷங்களுக்கு முன் ப்ரிதிவிராஜன் என்றொரு மகாவீரன் அரசாண்டு வந்தான்.

இந்தியாவில் பல அரச குடும்பங்கள் பல சமயங்களில் ஆண்டுவந்ததாகப் படித்திருக்கிறீர்களே. அவை சில காலங்களில் மேன்மை யுடையனவாய் இருந்தன. சில காலங்களில் மேன்மை குறைந்து விட்டன. அப்போது சாமர்த்தியமுள்ள வேறு அரசர்கள் முன்னுக்கு வருவார்கள். ஆனால் ஒவ்வொரு காலங்களில் பழைய குடும்பங்களில் ஒரு பெரிய சாமர்த்தியவான் அரசனாகி மறுபடி அந்த வமிசத்துக்குக் கீர்த்தி கொண்டுவருவதும் உண்டு.

இந்தப் பல அரச வமிசங்களுக்கு ராஜர் அல்லது ராஜபுத்திரர் என்று பெயர் வந்தது. அக்

காலத்தில் அவர்கள் சிறுசிறு நாடுகளில் அரசாண்டு வந்தனர். பழைய இந்திய அரசர்களைப் போல் அவர்களும் தர்மம், சத்தியம் முதலிய நற்குணங்கள் உடையவராய் இருந்தனர். ஆயினும் அவர்களுக்குள், யார் பெரியவர், யார் முதல்வர், என்னும் சச்சரவு அடிக்கடி வந்துவிடும் அதற்காக அவர்கள் ஒருவரோடொருவர் யுத்தம் செய்வதுமுண்டு. ப்ரிதிவி அரசன் நாளில் இந்தியாவின் மேற்குக் கணவாய் வழியாய் ஒரு புதிய சத்துரு இந்தியாவின்மீது படையெடுத்து வந்தான். அவன் பெயர் முகம்மது கோரி. அராபியாவில் முகம்மது நபி கற்பித்த மதத்தைச் சேர்ந்தவன். இந்தத் தேசத்துக்கு மேற்கில் உள்ள ஆப்கனிஸ்தானம் என்னும் நாட்டில் கஸ்னி நாட்டுக்கரசன், பலமும் தைரியமும் பொருந்திய அநேக வீரர்களுக்குத் தலைவன்.

முகம்மதிய மதம் இந்து மதத்தினின்றும் வேறானது. முகம்மதியர் இந்து மதத்தினரை 'மதம் கெட்டவர்' என்று அழைப்பார். அவர்களை எதிர்த்துச் சண்டைபோடுவார். அவர்களுடைய நாடுகளைக் கொள்ளையிட்டுச் சுட்டுக் கொளுத்துவார். அவர்களுக்கு இந்துக்களுடன் நியாயமாய், உண்மையாய் நடந்து கொள்வது அவசியமென்று தோன்றவில்லை.

முகம்மது கோரி ப்ரிதிவிராஜனுடன் ஒருதரம் சண்டை செய்து அதில் தோற்றுப்போனான். இப்

பொழுது மறுபடியும் வந்தான். அப்பொழுது ப்ரிதிவி மகம்மதுகோரிக்கு ஒரு கடிதம் அனுப்பினுன். அதில் யுத்தத்தால் நேரும் உயிர்ச் சேதத்தையும் பொருட் சேதத்தையும் எடுத்துக் காட்டினுன். ராஜபுத்திரர் முன்னமே யுத்தத்தில் காட்டிய வீரத்தை விளக்கினுன். சண்டை செய்யாமல் இரண்டு சைநியங்களும் சந்தி பண்ணிக்கொள்வது நலமென்று சொன்னுன்.

அதற்கு முகம்மது கோரி பதில் எழுதினுன். அதில் ப்ரிதிவியின் அபிப்பிராயம் சரிதான் என்றும், ஆயினும் சமாதானம் செய்யத் தனக்கு அதிகாரமில்லை என்றும், கோரிக் கோட்டைக்குச் செய்தியனுப்பி பதில் தெரிவிப்பதாயும் கண்டிருந்தது.

அக்கடிதத்தை நம்பி ராஜபுத்திர சைநியம் அன்றிரவு சற்று அஜாக்கிரதையாக இருந்தது. ஆனுல் கோரி எழுதிய கடிதம் மோசமானது. அவன் நம்பிக்கைத்துரோகம் செய்தான். ஏனெனில் அன்றிரவு முகம்மதிய சைநியம் ராஜபுத்திரரைத் தாக்கிற்று. அநேகர் தூக்கத்தில் கொலையுண்டனர். வெற்றி அச் சண்டையில் கோரி அரசனுடையதாயிற்று.

கேள்விகள்

1. ப்ரிதிவிராஜன் பிரதான பட்டணம் யாது? அதற்கு அருகில் இருந்து அழிந்த பழையபட்டணம் யாது?
2. ராஜபுத்திரர் யார்? அவர்களிடமிருந்த நற்குணம் யாது? துர்க்குணம் யாது?

3. ப்ரிதிவிராஜனை எதிர்த்து வந்த வீரன் யார்? எங்கிருந்து வந்தான்? அவனது தேசம் எங்கு உள்ளது?

4. அவன் இந்தியாவுக்கு வந்த வழியாய் இதற்கு முன் வந்து படையெடுத்த இரண்டு வீரர்களைச் சொல்லுக?

5. அக்கால முகம்மதியர் ஏன் இந்தியரை வெறுத்தனர்? இந்துக்களைப்பற்றி அவர்கள் என்ன நினைத்தனர்?

6. ப்ரிதிவிராஜன் தன்னை எதிர்த்த முகம்மதுவுக்கு எதை விளக்கிக் கடிதம் எழுதினான்? சத்துருவுக்கு ஏன் அவன் கடிதம் எழுதினான்?

7. முகம்மது கோரி என்ன பதில் எழுதினான்? அக் கடிதம் எப்படிப்பட்டது?

8. தான் கடிதம் எழுதியபடி கோரி செய்தானா?

9. ராஜபுத்திர அரசர்களுக்குள் ——— குறைவில்லை. ஆனால் ——— போதாது. ஆகையால் ———க் சட்டுப்படாத ஒரு ——— அன்னியன் அவர்களை எதிர்த்தபோது அவர்கள் எளிதில் தோற்றுப் போயினர்.

கோடிட்ட இடங்களில் பின்கண்ட வார்த்தைகளில் சரியானதை எழுதுக :— தைரியமுள்ள, திறமை, தர்மத்துக்கு, ஒற்றுமை. அவ்வாக்கியத்தை மனப்பாடம் செய்க.

10. யுத்தத்தால் நேரும் உயிர்ச் சேதத்தைக் கண்டு வருந்திய வேறொரு அரசன் யார்?

14. வியாபாரிகளா, அல்லது — ?

வங்காள நாட்டில் முன் ஒரு நாள் லக்ஷ்மண ஸேனன் என்று ஓர் அரசன் அரசாண்டான். அவன் பெரிய அறிஞன். தன்னை ஒத்த பல அறிஞர்களிடத்தில் அன்புப் மரியாதையும் காட்டி வந்தான். எண்பது வயதான பிறகு அவன் தன்னுடைய ராஜ்யத்தை விட்டுப் போகும்படி நேர்ந்தது.

முகம்மது கோரி ப்ரிதிவிராஜனுடன் சண்டை செய்யவே அவ்விந்திய அரசன் இறந்தான். அவன் நகரமான டில்லி முகம்மதியர் கைவசம் ஆயிற்று. அங்கிருந்த முகம்மதிய வீரர்கள் வட இந்தியாவின் பல பாகங்களைக் கைப்பற்றவும் கொள்ளையடிக்கவும் முயற்சி செய்தனர்.

அவர்களில் பாக்டியர் கில்ஜி என்பவன் ஒருவன். அவன் தைரியமும் சாமர்த்தியமும் வாய்ந்த ஒரு சிறு சைனியத்தை கூட்டிக்கொண்டு கங்கா நதி ஓரமாய் வங்காளத்தில் புகுந்தான். அந்த வீரரெல்லாம் வியாபாரிகள் போல வேஷம் தரித்துக் குதிரையின் மேலேறி வந்தனர்.

லக்ஷ்மணஸேனருடைய ராஜ்யத்தில் வியாபாரத்துக்கென்று யாரும் தாராளமாய் வரலாம். ஆகையால் அவர்களை வியாபாரிகளென்று நினைத்த லக்ஷ்மண ராஜனின் துருப்புகள் அவர்களைத் தடுக்கவில்லை. வங்காளத்தின் பிரதான நகரமான

நவத்துவீபத்துக்குள் இப் போலி வியாபாரிகள் இலகுவாய் நுழைந்தனர்.

அரண்மனை வாயில் வரும் வரையில் அவர்கள் வியாபாரிகளாகவே நடித்தனர். அங்கு வந்தவுடன் தங்கள் கத்திகளை உருவிக்கொண்டு வாயிற் காப்போரைக் கொன்று தைரியமாய் அரண்மனைக்குள் புகுந்து எதிர்ப்பட்டவர்களை எல்லாம் வெட்டி எறிந்தனர். எங்கும் ஒரே கலவரமாயிற்று.

அரண்மனையில் அக்கொள்ளைக்காரர் புகுந்தனர் எனக் கேள்விப்பட்ட கிழ அரசன் பயந்து வேறொரு மார்க்கமாய்க் கங்கையாற்றை அடைந்தான். அங்குள்ள படகிலேறிக்கொண்டு ஒருவர் கண்ணிலும் படாமல் கிழக்கு வங்காளத்தில் ஒரு பட்டணம் போய்ச் சேர்ந்தான்.

பாக்டியர் கில்ஜியும் அவன் வீரர்களும் நவத்துவீபத்தைக் கைப்பற்றினர். அங்கு உள்ள ஏராளமான பொருள்களைக் கொள்ளை அடித்தனர். வங்காளம் அதுமுதல் முகம்மதியர் கைவசப்பட்டு வெகுகாலம் அவர்கள் ஆளுகையிலேயே இருந்தது.

கேள்விகள்

1. ப்ரிதிவிராஜன் தோற்றபிறகு டில்லி யார் கைவசமாயிற்று? அவர்கள் அங்கிருந்து என்னென்ன செய்தனர்?
2. பாக்டியர் கில்ஜி யார்? அவன் எந்த நாட்டைக் கைப்பற்றினன்?

3. வங்காளத்தில் அப்பொழுது ஆண்ட அரசன் யார்? அவன் குணத்தின் மேன்மை யாது? அவனது முக்கிய பட்டணம் யாது?
4. நாட்டில் நுழைந்த முகம்மதிய வீரரை ஏன் வங்காளத் துருப்புகள் எதிர்க்கவில்லை?
5. நவத்துவீபத்தில் புகுந்த முகம்மதிய வீரர் என்ன செய்தனர்?
6. லக்ஷ்மணஸேன ராஜன் என்ன செய்யும்படி ஆயிற்று? அக் காலத்தில் அவனுக்கு என்ன வயது?

15. பயமுறுத்திக் காரியசித்தி பெற்றான்.

மகம்மது கோரி காலத்துக்கு நூறு வருஷங்களுக்குப் பிறகு டில்லியில் அலாவுடீன் என்று ஒரு வீரன் இருந்தான். அவன் அப்பொழுது ஆண்ட டில்லி அரசனின் மருமகன். தன் மாமனுக்குப் பிறகு தானே பட்டத்துக்கு வந்து இந்தியா முழுவதையும் ஜயித்து ஆளவேண்டுமென்பது அவன் எண்ணம்.

வட இந்தியாவைத் தென்னிந்தியாவிலிருந்து பிரிப்பது விந்தியமலை. அதைத் தவிர வேறு பல மலைகளும் அங்கு இருக்கின்றன. அலாவுடீன் டில்லிக்குச் சமீபத்தில் ஒரு இந்திய அரசனை எதிர்த்துச் சண்டை செய்ய உத்தரவு கேட்டான். உத்தரவு கிடைத்ததும் ஒரு சைனியத்தை அழைத்துக்

கொண்டு ஒருவரும் அறியாமல் மலைகளைத் தாண்டி மகாராஷ்டிரம் என்னும் நாட்டின் எல்லையில்வந்து சேர்ந்தான். தன்னைக் கேட்டவர்களுக்குத் தான் மகாராஷ்டிர அரசனிடம் சேவகத்தில் அமரச் செல்வதாகச் சொன்ஞன்.

அப்பொழுது மகாராஷ்டிர அரசன் ராமச்சந்திரதேவர். வட இந்தியாவிலிருந்து சத்துருக்கள் யாரையும் எதிர் பாராததால் தம்மிட மிருந்த சைனியத்தின் பெரும் பாகத்தைத் தமது மூத்த குமாரன் சங்கர தேவர் தலைமையின் கீழ்த் தனது ராஜ்யத்தின் தெற்குக் கோடிக்கு அனுப்பி யிருந்தான். ஆகையால் அலாவுடீன் எதிர்த்து வந்த காலத்தில் ஒரு சிறு மகாராஷ்டிர சைனியமே அவனை எதிர்த்தது.

அலாவுடீன் அவர்களைத் துரத்தி அடித்து அவர்கள் பிரதான நகரமான தேவகிரியை முற்றுகை போட்டான். அப்பொழுது சங்கர தேவர் சைனியம் திரும்பி வந்தது. அலாவுடீனேடு சண்டையும் செய்தது. ஜயம் இந்துக்களுக்குக் கிடைக்கும்போ லிருந்தது.

ஆனல் இதற்கு முன்னரே அலாவுடீன் இருபதினுயிரம் வீரர் கொண்ட பெரிய சைனியம் தனக்கு உதவியாக வருகிறதென்று சொல்லி இருந்தான். ஆயிரம் பெயர்க்குத் தலைவனுன ஒரு முகம்மதிய தளகர்த்தன் அவனுக்கு உதவியாக வரவே

அதுவே பெரிய டில்லி சைனியம் எனப் பயந்து இந்துசைனியம் ஓடிற்று. அலாவுடீனுடன் ராமச் சந்திர தேவர் சமாதானம் செய்துகொண்டார். அளவற்ற தங்கம், பலவித ரத்தினங்கள், வெள்ளி முதலியன பெற்றுக்கொண்டு அலாவுடீன் வடக்கு நோக்கி வந்தான்.

மறு வருஷமே அலாவுடீன் மாமனைத் தன் அரண்மனைக்கு அழைத்தான். அங்கு கொலையாளிகள் அக் கிழவனை வெட்டிக் கொன்றனர். அலாவுடீன் உடனே சிங்காதனம் ஏறினான்.

கேள்விகள்

1. அலாவுடீன் யார்? அவனது ஆசை என்ன?
2. அவன் யாரை எதிர்த்து யுத்தம் செய்யச் சென்றான்?
3. டில்லி ராஜ்யத்துக்கும் மகாராஷ்டிரத்துக்கும் நடுவில் போக்கு வரத்துக்கு என்ன தடைகள் இருந்தன?
4. அக்காலத்திய மகாராஷ்டிர அரசன் யார்? அவன் ஏன் போருக்குத் தயாராயில்லை? அவரது பிரதான பட்டணம் எது?
5. சங்கர தேவர் யார்? தேவகிரி முற்றுகையின்போது அவர் என்ன செய்தார்?
6. இந்து சைனியம் ஓடிப்போனதற்குக் காரணம் என்ன?
7. அலாவுடீன் எப்படித் தனது மாமனுடைய சிங்காதனத்தில் ஏறினான்?
8. அலாவுடீனுக்கு ——— ஒரு பிரமாதமில்லை. ஏதோ ஒரு ராஜ்யத்தை ——— உத்தரவு கேட்டு

மகாராஷ்டிரத்தை அடைந்தான். தன்னைக் கேட்டவர்களுக்கு அவ்வரசனிடம் ———— தேடப் போவதாகச் சொன்னான். ராமச்சந்திரதேவரைத் தனக்கு ———— இருந்து பெரிய சைனியம் ———— வருவதாகப் பொய் சொல்லிப் பயமுறுத்தினான். வேலை, பொய், டில்லியில், எதிர்க்க, உதவியாக; இவ் வார்த்தைகளைக் கோடிட்ட இடத்தில் பொருத்தமாய் அமைக்க; மனப்பாடம் செய்க.

குறிப்புகள்

முற்றுகை = அரசர்கள் தமது முக்கிய நகரங்களைக் காப்பாற்ற அவற்றைச் சுற்றிக் கோட்டை கட்டுவித்து, அகழிகள் வெட்டி அவற்றில் ஜலம் நிரப்பி முதலை முதலிய துஷ்ட ஜந்துக்களை விட்டுவைப்பதும் உண்டு. அதனால் எதிரிகள் சுலுவில் அந்நகரங்களுக்குள் வரமுடியாது. ஆதலால் அந்நகரங்களைப் பிடிக்கச் சத்துருக்கள் அதைச்சுற்றித் தமது சைனியங்களை வைத்துச் சமயம் பார்த்து கோட்டையிலுள்ளவர்களை எதிர்த்து அடித்து கோட்டைச் சுவரை இடித்து அகழிகளைத் தூற்றுத் தமக்கு உள்ளே புக வழி செய்வதுண்டு.

16. கட்டடம் விழுந்து இறந்த அரசன்

அலாவுடீன் ஆட்சிக்கு வந்த முப்பது வருஷங்களுக்குப் பின் முகம்மது துக்லக் என்பவன் டில்லி அரசனானன். அவனுக்கு முன் அரசாண்டவர் கியாஸுடீன் என்னும் பெயருடைய அவன் தகப்பன்.

இந்தக் கியாஸுடீன் வெகு நல்ல அரசன். தம்மைச் சார்ந்தவர்களுக்குத் தாம் பட்டத்துக்கு வந்தவுடன் மரியாதை செய்தார். ராஜ்யத்தை நன்ருக ஆள்வதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தார். நிலம் பயிரிடுவோரிடம் கொஞ்சமாகப் பகுதி வாங்கினர்.

வங்காளம் டில்லிக்குஉட்பட்டிருந்த மாகாணம். அங்கு இரண்டு மகம்மதியத் தலைவர் அரசனுக்காக அம் மாகாணத்தை ஆண்டனர். ஆனால் அங்குக் கலகம் நடந்தது. அதை அடக்க கியாஸுடீன் அந் நாட்டுக்குச் சென்ருர். அத் தலைவர்களை அடக்கி அந்நாட்டில் அமைதி உண்டாக்கினர். பிறகு டில்லிக்குத் திரும்பி வந்தார். அரசன் டில்லியை விட்டுப் போயிருந்த காலத்தில் அவருக்குப் பதிலாக அவர் மூத்தமகன் உலுக்கான் ராஜ்ய காரியத்தைப் பார்த்து வந்தான். தன் தகப்பனை மரியாதையுடன் எதிர்கொண் டழைத்துத் தான் புதிதாக மரத்தால் கட்டிய ஒரு அரண்மனையில் அவருக்கு உபசாரம் செய்தான்.

சாப்பாடு ஆனவுடன் அக் கட்டடத்திலிருந்து அநேகர் வெளியே வந்தனர். அப்பொழுது அக் கட்டடம் சாய்ந்து விழுந்தது. அதிலிருந்த பலர் இறந்தனர். அவர்களில் கியாஸுடீன் அரசனும் அவர் செல்வ மகனுன மாமூதும் கூட இறந்தனர்.

இதனால் உலுக்கானுக்குப் பட்டம் கிட்டியது. முகம்மது என்னும் பெயருடன் அவன் சிம்மாசனம் ஏறினான்.

கியாஸுடீன் அரசன் இறந்தது கடவுள் செயலா அல்லது உலுக்கான் செயலா? சிறிது காலம் கழித்துப் புதிய அரசன், அக்கட்டடம் கட்டினவன் மகனைத் தனது ராஜ்யத்தில் பெரிய உத்தியோகத்தில் அமர்த்தினான்.

கேள்விகள்

1. கியாஸுடீன் அரசனின் குணங்கள் என்ன?
2. அவர் ஏன் வங்காளத்துக்குச் சென்றார்? அப்பொழுது டில்லியில் யார் ராஜ்ய காரியங்களைக் கவனித்து வந்தது?
3. திரும்பி வந்த தகப்பனுக்கு உலுக்கான் என்ன உபசாரம் செய்தான்?
4. அப்பொழுது கியாஸுடீன் இறக்கக் காரணம் என்ன? அவருடன் கூட இருந்த முக்கியமானவன் யார்?
5. உலுக்கான் பட்டத்துக்கு வந்தபிறகு யாருக்குப் பெரிய வேலை தந்தான்?
6. வங்காளத்தின் வழியாய் ஓடும் பெரிய நதி எது?

17. பிள்ளைக்காக உயிர் துறந்த பெரியோன்

இந்தியாவுக்கு வடமேற்கிலுள்ள கணவாய்களின் வழியாய் அநேக ஜனத்தலைவர்கள் இந்தியாவின்மீது படையெடுத்தனர் என்று படித்திருக்



கிறீர்கள். அவ்வாறு ஆப்கானிஸ்தானத்திலிருந்து படையெடுத்தவர்களில் பாபர் என்பவர் ஒருவர். அக் காலத்தில் டில்லியில் ஆண்டு வந்த இப்ரஹீம் லோடி என்பவரைத் தோற்கடித்துப் பாபர் டில்லி அரசனுனர்.

இந்தப் பாபர் சிறந்த வீரர். அவரது பன்னிரண்டாவது வயதில் அவர் தகப்பன் இறந்தார். அதுமுதல் தன் தகப்பன் நாட்டுக்காக தனது தாயாதிகளுடன் அவர் சண்டையிட வேண்டியிருந்தது. அந் நாடு ஆப்கனிஸ்தானத்துக்கு வடக்கில் ஒரு மலைக்கு அப்புறம் உள்ளது. பத்துவருஷம் வரையில் சண்டையிட்டு அது தனக்குக் கிடைக்காதென்று கண்ட பிறகுதான் ஆப்கனிஸ்தானத்தில் அரசனானர். வட இந்தியாவை ஜயித்ததால் அவருடைய நாடு மிகப் பெரியதாயிற்று. பாபர் சிறந்த குண முடையவர். தமது மக்களிடத்தில் அதிக பிரியமுள்ளவர். அவருடைய மூத்தபிள்ளை ஹுமாயூன். அவனிடத்தில் பாபருக்குப் பிரியம் அதிகம்.

ஒரு சமயம் ஹுமாயூன் நோயினால் மிகவும் வருந்தினர். அப்பொழுது சில பெரியோர்கள் பாபருக்குச் சொந்தமான உயர்ந்த பொருளைக் கடவுளுக்குக் கொடுத்தால் ஹுமாயூன் பிழைப்பான் என்றனர். உயர்ந்த பொருள் என்றால் என்னவென்று பாபர் யோசனை செய்தார். கடைசியாய்க் கடவுளுக்குக் கொடுக்கக் கூடிய உயர்ந்த பொருள் தன் உயிரே என்ற தீர்மானத்துக்கு வந்தார். உடனே பாபர் ஹுமாயூனை மூன்றுதரம் சுற்றி வந்து தன் உயிரைக் கடவுளுக்குக் கொடுப்பதாகச் சொன்னர். ஆச்சரியம்! அதுமுதல் ஹுமாயூனின் நோய் குணமடைய ஆரம்பித்தது. பாபர் நோய் கண்டு இறந்தார்.

கேள்விகள்

1. பாபர் யார்? எங்கிருந்து இந்தியாவின் மேல் படையெடுத்து வந்தார்? அப்பொழுது ஆண்ட டில்லி அரசன் யார்?
2. அவன்கதி என்னவாயிற்று? பாபரின் தகப்பன் ஆண்ட நாடு எங்குள்ளது?
3. அந் நாட்டில் அவர் ஏன் தங்கவில்லை?
4. அவர் இந்தியாவுக்கு வருமுன் அரசாண்ட நாடு எது?
5. பாபரின் மூத்த குமாரன் யார்? அவன் நோயால் வருந்தின காலத்தில் பெரியோர் பாபருக்குச் சொன்னது என்ன?
6. கடவுளுக்கு உகந்த பொருள் யாது என அவர் தீர்மானித்தார்?

18. வேட்டையை வெறுத்த மன்னன்

பாபர் சக்கரவர்த்தியின் பேரப்பிள்ளை அக்பர். அவர் சிரேஷ்டரான இந்திய அரசரில் ஒருவர். வீரமும் நற்குணங்களும் வாய்ந்தவர். வட இந்தியாவையும் ஆப்கனிஸ்தானத்தையும் ஒருமிக்க ஐம்பது வருஷகாலம் ஆண்டவர்.

அக்பருக்கு சகல ஜந்துக்களிடமும் தயவு உண்டு. அவர் சிறு பிள்ளையா யிருக்கும் பொழுது ஒரு நாள் வேட்டையாட ஏற்பாடு செய்தனர். அரசர்களுக்கும் பணக்காரரான மற்றவர்களுக்கும் மிருக வேட்டை ஒரு விளையாட்டு.

அதற்காகப் பல பிரபுக்கள் வந்து கூடினர். அரண்மனை வாயிலி லெல்லாம் எங்குப் பார்த்தாலும் குதிரைகளும் வேட்டைக்காரரும் வந்து கூடியிருந்தனர். பலவித வாத்தியங்கள் முழங்கின. ஆக்பர் வரும் சமயமும் வந்தது.

அவ்வரச குமாரனும் உயர்ந்த உடுப் பணிந்து கொண்டு குறிப்பிட்ட காலத்தில் அங்கு வந்தனர். எல்லோரும் வேட்டைக்குப் புறப்படும் காலத்தில், திடீரென்று ஆக்பர் சிறிது தயங்கினர். அவரது கண்முன் ஏதோ தென்பட்டது போல் திகைத்தார். தலை குனிந்தார். அவரது கண்களிலிருந்து சில நீர்த் துளிகள் விழுந்தன.

பிறகு அங்கு கூடி யிருந்தவர்களிடம் தான் வேட்டையாடப் போவதில்லை என்று சொல்லி அரண்மனைக்குள் போய் விட்டனர். பலர் கூடச் சென்று என்ன சமாசாரம் என்று அவரைப் பரிவுடன் விசாரித்தனர். அவருக்கு உடம்பு திடீரென்று நோய் கொண்டது என்று அவர்கள் நினைத்தனர்.

ஆனால் ஆக்பர் அப்படி யொன்று மில்லையென்று அவர்களிடம் கூறினர். வேட்டை யாடும் போது பிராணிகள் படும் பாட்டை மனத்தில் எண்ணவே அது தமக்கு வருத்தத்தை உண்டு பண்ணி விட்டது என்று அவர் பதில் உரைத்தார். 'விளையும் பயிர் முளையிலே' என்று ஒரு பழமொழியுண்டு. சிறுவராக விருக்கும் போதே உயிர்களிடத்

தில் கருணை காட்டிய இம் மன்னன், தனது நாட்டிலுள்ள ஜனங்களிடத்தில் தன் ஆயுள் முழுதும் அன்பே காட்டி வந்தனன். முகம்மதிய அரசர்களுள் ஆக்பரே உயர்ந்த நற்குணம் நிறைந்தவர்.

கேள்விகள்

1. பாபருக்கும் ஆக்பருக்கும் என்ன உறவு? ஆக்பர் எம் மாதிரியான அரசர்?
2. வேட்டைக்குப் புறப்படும் சமயத்தில் ஆக்பருக்கு என்ன நேர்ந்தது?
3. வேட்டை நடவாமல் நின்ற பொழுது அவரது பிரபுக்கள் என்ன நினைத்தனர்? ஆக்பர் அவர்களுக்கு என்ன பதில் சொன்னார்?
4. ஆக்பர் அரசாண்ட காலத்தில் அவர் எப்படி நடந்து கொண்டார்?

19. தனது பத்தினியின் ஞாபகார்த்தம்

வட இந்தியாவில் ஆக்ரா என்றொரு பட்டணம் செல்வோம். அது டில்லிக்குத் தெற்கேயிருக்கிறது. அங்கு ஆக்பர் சக்கரவர்த்தியின் பேரன் கட்டுவித்த ஓர் அதிசய கட்டடம் இருக்கிறது. அச்சக்கரவர்த்தியின் பெயர் ஷாஜிஹான். அவர் கட்டிய கட்டடம் தாஜ்மகல். அப் பதத்துக்கு 'அரண்மனையின் கிரீடம்' என்றர்த்தம்.

ஆக்ராவின் வீதிகள் வழியாய்ச் செல்வோம். அவை வெகு குறுகலானவை. ஆனால் அவற்றின்

இரண்டு பக்கங்களிலும் பெரிய அழகிய வீடுகள் இருக்கின்றன. அவை பழமையானவை. அவைகளைக் கட்டி வெகுகாலமாயிற்று.



இதோ எதிரில் தெரிகிறதே ஒரு அழகிய தோட்டம்; அதன் மத்தியில் தாஜ்மகல் இருக்கிறது. என்ன உன்னதமான அமைப்பு! ஒரே வெளுப்பாய் இன்று கட்டி முடிந்தது போல தூசு இல்லாமல் இருக்கிறது அக்கட்டடம்.

தோட்டத்தின் உள்ளே செல்வோம். எதிரில் ஜலம் நிறைந்த ஒரு நீளமான ஓடை இருக்கிறது. அதன் மத்தியில் அடுத்தடுத்துக் கல்லில் வெட்டிய சிறிய ஸ்தூபிகள் பல இருக்கின்றன. அந்த ஜலம் அசைவற்று நிற்பதால் இந்த ஸ்தூபிகள் நிழலும்,

தோட்டத்தில் அடுத்துள்ள மரங்களின் நிழலும் எதிரிலுள்ள பெரிய கட்டடத்தின் நிழலும் அதில் தலை கீழாகத் தெரிகின்றன. அக்காட்சி பார்ப்ப தற்கு வெகு அழகாக இருக்கிறது.

குளத்தின் பக்கங்களில் கல் படுத்திய பாதை கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றின் வழி யாய்ச் செல்லுவோம். தாஜ்மகலின் சமீபத்தில் அது கொண்டுவந்து விடுகிறது. ஆ! என்ன உயரம்! என்ன விஸ்தாரம்!

படிகள் ஏறி உள்ளே சென்று சற்று நோக்கு வோம். உள்ளெல்லாம் வெள்ளையான சலவைக் கற்களால் ஆனது. எங்குப் பார்த்தாலும் வெகு அழகிய சித்திர வேலைகள் செய்யப்பட்டிருக் கின்றன. பிரகாசமான பச்சை, நீலம், சிவப்பு முதலிய நிறங்களுடைய ரத்தினங்கள் இழைத்துக் கொடிகள் போலவும், பலகணிகள் போலவும் வேலை செய்யப்பட்டிருக்கின்றது. இதுவே உலகத்தில்

மிக அழகான கட்டடம். இதைக் கட்டப் பதினேழு வருஷம் ஆயிற்று. ஆசியாக் கண்டத்தின் பல பாகங்களிலிருந்து கைதேர்ந்த வேலைக்காரர்கள் வந்து இங்கு வேலை செய்தார்கள். இதைக் கட்ட ஒருகோடி ரூபாய் பிடித்ததென்று சொல்வார்கள்.

இக் கட்டடத்தை ஷாஜிஹான் சக்கரவர்த்தி தனது பிரிய மகாராணி மும்தவ்-இ-மஹலின் ஞாபகார்த்தமாகக் கட்டினர். இந்திய அரசர்கள் பல மனைவிகளை விவாகம் செய்துகொள்வது வழக்கம். ஆனல் இவருக்கு இந்த ஒரு பெண்மணியே மனைவி. அவள் இறந்து 33 வருஷம் வேறு கலியாணம் செய்து கொள்ளாமல் இருந்தார். அதனுல் அவர் அவளிடம் வைத்திருந்த அதிகப் பிரியம் தெரிகிறது அல்லவா?

தாஜ்மகலில் ஷாஜிஹானும் அவர் மனைவியும் புதைக்கப்பட்டிருக்கின்றனர்.

கேள்விகள்

1. தாஜ்மகல் என்ருல் என்ன அர்த்தம்? அது யாரால் எங்கு கட்டப்பட்டிருக்கிறது?
2. அதை அந்தச் சக்கரவர்த்தி எதற்காகக் கட்டினர்?
3. மனைவிகள் விஷயத்தில் ஷாஜிஹான் ஏனைய இந்திய அரசரிலிருந்து எப்படி மாறுதலுள்ளவர்?
4. சற்று தூரத்திலிருந்து பார்க்குங்கால் தாஜ்மகல் எப்படி இருக்கின்றது?

5. தாஜ்மகலைச் சுற்றியுள்ள தோட்டத்தில் அக்கட்டடத்திற்கு நேரில் என்ன இருக்கிறது? அதில் எவற்றின் பிரதிபிம்பம் தெரிகின்றன? (பிரதிபிம்பம் = எதிர் உருவம்)

6. தாஜ்மகல் முக்கியமாய் என்னகல்லால் கட்டப்பட்டிருக்கிறது?

7. தாஜ்மகலின் உள்பாகத்தில் என்ன மாதிரி சித்திர வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன?

8. அது கட்ட எத்தனை வருஷம் பிடித்தது? எங்கிருந்தெல்லாம் வேலைக்காரர்கள் வந்தனர்? என்ன செலவு ஆயிற்று?

20. குமாரனின் தீர்மானம்

இந்தியாவின் வடமேற்கில் இருப்பது பஞ்சாப் மாகாணம். இங்குள்ள ஜனங்கள் மிகுந்த தைரியசாலிகள். வடமேற்குக் கணவாயி லிருந்து இந்தியாவின் மீது படையெடுத்து வந்த பல கூட்டத்தார் முதலில் பஞ்சாபுக்கே வந்தார்கள். பலமும் குரூரமும் வாய்ந்த அவர்களை எதிர்த்து முதலில் சண்டையிடுவது பஞ்சாப் மாகாணத்தாருடைய வேலையாக இருந்தது.

அங்கு சீக்கியர் என்று ஒரு கூட்டத்தார் இருந்தனர். அவர்கள் அநேகமாய் இந்துக்கள். ஆனால் அவர்களுடைய குரு முஸ்லிம் மதத்தில் உள்ள உண்மைகளையும் சீக்கியர் தழுவ வேண்டு

மென்று போதித்தார். சீக்கியர்களுக்குள் ஜாதி வித்தியாசம் இல்லை. அவர்களுக்கு அம் மதத்தைப் போதித்த குருமார் பத்துப் பெயர் உண்டு. அவர்களில் ஒன்பதாவது குரு தேஜ் பகதூர் என்பவர். இவர் மிகுந்த தைரியசாலி. நல்ல ஞானவான். சீக்கியருக்கே தமது குருமார்களிடத்தில் மிக்க பக்தியும் விசுவாசமும் உண்டு. தேஜ் பகதூரிடத்தில் அவர்களுக்கு மிகுந்த விசுவாசம் இருந்தது.

அவர் காலத்தில் டில்லிமா நகரில் ஔரங்கசீப் என்று ஒரு சக்கரவர்த்தி அரசாண்டார். அவர் ஷாஜிஹானுடைய குமாரர். அவருக்குப் பிறகு பட்டத்துக்கு வந்தார். அவருக்கு முஸ்லிம் மதமே உண்மை என்றும், மற்றவை பொய் என்றும் எண்ணம். ஆகையால் இந்து மதத்தினர் பலரையும் பல வழிகளில் தொந்தரவு செய்து வந்தார்.

இவ்வரசன் தேஜ் பகதூரைத் தமது சபைக்கு வரும்படி அழைத்தார். அவர் வந்த பொழுது அவரை முஸ்லிம் மதத்தைத் தழுவும்படி கேட்டார். அவர் மாட்டேன் என்று மறுத்து விட்டார். அது காரணமாய் அவருக்குச் சிறை வாசம் விதித்தார். சிறிது நாள் கழித்து அவர் பேரில் ஒரு பொய்க் குற்றம் சாட்டி அவரைக் கொன்று விடும்படி உத்தரவிட்டார்.

இவற்றை எல்லாம் பார்த்திருந்த கோவிந்த சிங்கு என்ற அவருடைய மகன் பதினோராவது

வயதில் குருவானார். தன் தகப்பனுடைய கதியை நினைந்து ஔரங்கசிப்பை பழிக்குப் பழி வாங்க வேண்டு மென்று தீர்மானித்தார். சீக்கியரைச் சிறந்த போர் வீரராக ஆக்கினார். அவர்களுக்குள் ஒருவித வித்தியாசமும் இல்லாது செய்தார். சீக்கியர் எல்லாம் ஒரு சகோதரக்கூட்டம் என நினைக்குமாறு செய்தார். அவர்கள் சாராயம் குடிக்கக் கூடாது. கஞ்சாவையும் புகையிலையையும் உபயோகிக்கக் கூடாது என்று தடுத்தார். எல்லோரும் ஒரு கத்தியையாவது எப்போதும் தரித்திருக்க வேண்டுமென்றும் ஏற்பாடு செய்தார்.

தமது பலம் அதிகரித்தவுடன் கோவிந்த சிங்கு ஔரங்கசிப்பின் சேனைத் தலைவர்களுடன் அடிக்கடி சண்டை செய்து அவர்களைத் தொந்தரவு செய்து வந்தார். அவர் நாளில் முகம்மதியர்கள் பஞ்சாபில் தலைகாட்ட முடியவில்லை.

கேள்விகள்

1. இந்தியாவின் வடமேற்குப் பாகத்தில் உள்ள மாகாணத்தின் பெயர் என்ன? அங்கு உள்ளவர்களின் முக்கிய குண அதிசயம் யாது? அவர்கள் அப்படியானதற்கு ஒரு காரணம் சொல்லுக?

2. சீக்கியர் யார்? அவர்கள் குருவின் ஒரு போதனையைச் சொல்லுக.

3. சீக்கிய குருமார் எத்தனைபேர்? தேஜ் பஹதூரைப்பற்றி உனக்கு என்ன தெரியும்? அவர்காலத்தில் அர

சாண்ட டில்லி மன்னன் யார்? மதவிஷயத்தில் அவரது அபிப்பிராயம் என்ன?

4. முகம்மதியராக மறுத்த தேஜ் பஹதூரின் கதி என்ன?

5. கோவிந்த சிங் யார்?

6. தகப்பன் கொல்லப்பட்டபோது சீக்கியர் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள என்னென்ன செய்யவேண்டுமென்று அவர் போதித்தார்?

21. துக்காராம் பாவா

இந்தியாவின் மேற்குப் பாகத்தில் உள்ளது மகாராஷ்டிரம். இது மலைப்பாங்கான பிரதேசம். எக்காலத்திலும் சிறந்த வீரர்கள் இருந்த இடம்.

முன்னூறு வருஷங்களுக்கு முன் அந்நாட்டில் அநேக பெரியோர் அவதாரமாகி, தம்மை அடுத்துள்ள ஜனங்களுக்குப் பலவழிகளில் ஊக்கம் உண்டு பண்ணினர். அவர்கள் பண்டரி புரத்தில் உள்ள பண்டரி நாதனை முக்கியமாய்த் தொழுது வந்தனர். அவர்கள் பக்தியையே மேலாக நினைத்து கடவுளின் குணங்களைப் புகழ்ந்தும் அவர் நாமங்களைப் பாடியும் அவர்கள் கதைகளை ஆடல் பாடல்களுடன் ஜனங்கள் மனமுருகச் சொல்லியும் வந்தனர். அவர்களுக்குப் பாகவதர் என்று பெயர்.

அவர்களில் ஒரு பெரியோர் துக்காராம் பாவா. அவர் புனாவுக்கருகில் ஒரு சிற்றூரில் பிறந்தார். பதின்மூன்றாவது வயதில் தமது தகப்பனாருடைய தானியம் விற்கும் தொழிலை ஏற்றுக் கொண்டார். அதில் முதலில் அவருக்கு லாபம் கிடைத்தது. ஆனால் சில வருஷங்கள் கழித்து, விலை வாசிகள் சரியாயில்லாததால் நஷ்டம் வந்து முதலழிந்து போய்விட்டது. மேலும் அப்பொழுது நேர்ந்த ஒரு பஞ்சத்தில் அவரது மூத்தபெண்சாதி அன்னமில்லாமல் இறந்தாள்.



துக்காராமுக்கு இவ்வுலகில் பற்று நீங்கியது. அவர் தமது தொழிலை முற்றும் துறந்தார். நாமதேவர் என்னும் ஒரு பாகவதப் பெரியாரைப்போல் தாமும் துறவு பூண்டு அநேக துதிப்பாடல்களைப் பாடினார். அவற்றில் அவர் தம்மைப் பாவி என்றும் தாம் உயர்ந்த புனித நிலையை அடையக் கடவுள் அருளே வேண்டுமென்றும், அவ்வருள்

பண்டரிபுரம் வித்தோபா (பண்டரிநாதர்) விட மிருந்து வரவேண்டு மென்றும் பாடியிருக்கிறுர்.

அப் பெரியாருடைய பக்தி நிலையையும், பிற ருக்குதவும் குணத்தையும் உலக சுகங்களில் வெறுப் பையும் கண்டு அநேகர் அவருடைய சீடராயினர்.

துகாராம் இயற்றியபாடல்கள் பல. அவற்றை அக்காலம் முதல் இக்காலம் வரை அந் நாட்டினர் மிக்கப் பெருமையாய்ப் பாராட்டி, அவற்றைப் பாடியும் வருகின்றனர். வயலில் வேலை செய்யும் குடியானவன் பகலில் தனக்குத்தானே அவற்றைப் பாடுவான். பொழுது போனவுடன் கிராமத்தார் ஒன்று கூடி ராத்திரியிலும் அதைப் பாடுவார். படித்த வித்துவான்களும் அப்பாடல்களைப் பெரி தும் மதிக்கின்றனர்.

துக்காராம் போன்ற பெரியோரின் வாழ்வு, படிப்பினை முதலியவற்ருல் அக்காலத்து மஹா ராஷ்டிரர் மதப்பற்றும், பொதுமக்களுள் ஒற்று மையு முடையராயினர்.

கேள்விகள்

1. மகாராஷ்டிரம் எங்குள்ளது? எப்படிப்பட்ட நாடு?
2. பாகவதர் என்பவர்கள் யார்? அவர்கள் யாரைத் தொழு பவர்? அவர்களுடைய போதனையால் மகாராஷ்டிர ஜனங்கள் எப்படி ஆயினர்?
3. துக்காராம் பாவாவைப்பற்றி உங்களுக்கு என்ன தெரி யும்? அவருடைய பாடல்களை யார் யார் பாடுவார்?
4. துக்காராம் படிப்பினையால் உண்டான நன்மை யென்ன?

22. பசுவையும் தர்மத்தையும் காத்தவன்

மஹாராஷ்டிர நாடு சிறிது சிறிதாக முகம்மதியரால் வெல்லப்பட்டது. ஆயினும் அங்குள்ள ஹிந்துக்கள் தங்கள் மதத்தையும் தெய்வங்களையும் விடவில்லை. இங்கு பல பெரியோர் கடவுள் பக்தியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினர் அல்லவா ?

அவர்களில் ஒருவர் துக்காராம் பாவா. மற்றொருவர் ராமதாஸ் என்னும் பெரியவர். அவர் நாளில் அத்தேசம் முகம்மதியர் ஆளுகையில் இருந்தது. இந்துக்களும் முகம்மதியர்களும் அப்பொழுது ஒத்துவாழ ஆரம்பித்தனர். ஆயினும் அரசன் முகம்மதியனானதால் சிலசமயம் இந்துக்களுக்குக் கஷ்டம் இருந்து வந்தது.

மகாராஷ்டிரத்தில் ஷாஹஜி என்று ஒரு சேனைத்தலைவன் இருந்தான். அவன் முகம்மதிய அரசர்களிடம் வேலைபார்த்து வந்தான், அதற்காக இரண்டு பெரிய ஜில்லாக்கள் அவனுக்கு ஜாகீராக (மானியம்) கொடுக்கப்பட் டிருந்தன. ஷாஹஜிக்கு சிவா என்று ஒரு பிள்ளை பிறந்தான். அவன் பிறகு பெரியோனாக ஆனதால் அவனை சிவாஜி என்று மரியாதையாக அழைப்பதுண்டு. ஷாஹஜி எப்பொழுதும் யுத்தத் தொழிலையே பார்த்து வந்தான். ஆகையால் சிவாஜி தனது தாயின் மேற்பார்வையிலேயே வளர்ந்தான். அவளிடம் அவனுக்

குப் பக்தி அதிகம் ஏற்பட்டது. அந்த ஜாகீரில் கொண்டதேவர் என்று ஒருவர் அதிகாரியாயிருந்தார். அவர் சிவாஜிக்குப் போர்த் தொழிலையே முக்கியமாகப் பயிற்றுவித்தார்.

சிவாஜி புனாவிலும் அதைச்சுற்றியுள்ள இடங்களிலும் நடக்கும் ஹரிகதைகளுக்குப் போகிறதுண்டு. அங்கு ராமன் தர்மபுத்திரர்போன்ற பெரியோரின் நற்குணத்தை ஆவலுடன் கேட்பான். அப்பெரியோரைப்போல் தர்மத்தை அவன் காக்க வேண்டுமென்று அன்னைசொன்ன புத்தி அவன் மனதில் ஊன்றியது. சிவாஜி இளம் வயதிலேயே தனது ஊரிலுள்ள சிறுவர்களைத் தனக்கு நேசர்களாக ஆக்கிக்கொண்டான். அவனே அவர்களுக்குத் தலைவனும் ஆனான்.

முகம்மதியர் செய்யும் துன்பங்களினின்று இந்துக்களை விடுவிக்க முயன்றான். இந்துக்கள்

தமது ஆசாரப்படி நடப்பது முகம்மதியருக்குக் கோபம் தரும். ஆகையால் முகம்மதியர் ஆளு கையிலிருந்த மஹாராஷ்டிர நாட்டை அவர்க ளிடம் இருந்து கைப்பற்ற அவன் எண்ணம் கொண்டான். அதற்காக அவன் பல யுத்தங்கள் செய்தான். பல கோட்டைகளைக் கட்டினுன். இருபத்தைந்து வருஷ காலத்தில் பெரிய நாட்டை ஜெயித்து அதற்கு அரசனுனன்.

அந்நாட்டில் தர்மமும் பசு ரக்ஷணமும் நடந்தது. பழைய காலத்து இந்திய அரசர்களைப் போலவே சிவாஜியும் தர்மராஜ்யம் நடத்தி வந்தான்.

கேள்விகள்

1. மகாராஷ்டிரத்தில் கடவுள் பக்தியில் விளங்கிய பெரியோர்கள் யார்?
2. ராமதாஸ் நாளில் மஹாராஷ்டிரத்தை யார் ஆண்டனர்?
3. ஷாஹஜி யார்? யாரிடம் வேலையில் இருந்தான்? அவன் குமாரன் யார்?
4. சிவாஜி யாரிடம் போர்த்தொழில் பயின்றுன்? அவன் இளம்பிராயத்தில் கேட்டு அறிந்த கதைகள் எவை? ராமன், தர்மபுத்திரர் யார்? தர்மத்தைக் காக்க சிவாஜி என்ன செய்தான்?
5. ஏன் மஹாராஷ்டிர நாட்டை அவன் கைப்பற்ற முயன்றுன்?
6. சிவாஜியின் ஆட்சியில் விசேஷம் என்ன?

குறிப்புகள்

ஜாகிர் — சேனைத்தலைவர்களுக்கு அரசனால் தனக்கு உட்பட்டு ஆளத்தந்த சிற்றரசு. ஹரிகதை — ஹரி என்று விஷ்ணுவுக்குப் பெயர். அவர் இந்தப் பூமியில் பல அவதாரங்கள் எடுத்ததாகச் சொல்லுவார்கள். விஷ்ணுவே ராமனாகவும் கிருஷ்ணனாகவும் அவதாரம் எடுத்தார். விஷ்ணு இவ்வுலகிலுள்ள உயிர்களைக் காப்பவர். அவருடைய கதைகள் பல. அக் கதைகளை எடுத்துச் சொல்லி விஷ்ணுவினிடம் பக்தி செய்யும்படி சொல்ல ராமதாஸ் போன்ற ஜனங்கள் தோன்றினர். ரக்ஷணம் - பாதுகாப்பு.

23. மிளகு விலை அதிகமானது

'கொச்சியில் பணத்துக்கு மிளகு குறுணி' என்பர் பெரியோர். அச்சிறிய நாட்டில் மிளகு ஏராளமாக விளைவதால் அங்கு அது மலிவாய் இருந்தது. அம்மாதிரியே மேற்குக் கடலை ஒட்டிய தென்னிந்தியாவிலுள்ள எல்லா ஜில்லாக்களிலும் திருவாங்கூரிலும் இந்தியாவுக்குத் தெற்கிலுள்ள சிம்மளத்தீவிலும் அது விசேஷமாய் அகப்படும்.

மிளகு நாம் உண்ணும் உணவுக்கு நல்ல வாசனையைத் தரும் அல்லவா? அது விளையும் நாடுகளிலிருந்து அதைப் பலர் தமது தேசங்களுக்கு வாங்கிப்போவது வெகுகால வழக்கம்.

ஆசியாவுக்கு வடமேற்கேயுள்ள கண்டம் ஐரோப்பா என்று உங்களுக்குத் தெரியும். அக்

கண்டத்தின் மேற்குப் பாகத்தில் அதை ஒட்டி இரண்டு பெரிய தீவுகளும் பல சிறிய தீவுகளும் இருக்கின்றன. அவற்றுக்குப் பிரிடிஷ் தீவுகள் என்று பெயர். அவற்றில் இங்லண்ட் என்னும் தேசம் முக்கியமானது. அத்தேசத்து ஜனங்கள் இங்கிலீஷ்காரர் எனப்படுவர்.

இங்கிலீஷ்காரர் தேகபலமும் தைரியமும் மிக்கவர். வெகு சாமர்த்தியக்காரர். அவர்களில் துணிவு வாய்ந்த பலர் நானூறு வருஷங்களுக்கு முன் தங்கள் நாட்டிலிருந்து மிகப் பெரிய சமுத்திரங்களைத் தாண்டிப் பல புது தேசங்களைக் கண்டுபிடித்தனர். வியாபாரத்துக்காகவும், அங்கு குடியேறியும், அந் நாடுகளிலேயே அவர்கள் வசித்து வந்தனர்.

இந்தியாவிலிருந்து வந்த மிளகு வியாபாரம் ஒரு சமயம் டச்சுக்காரர் என்பவர்கையில் இருந்தது. அவர்களும் இங்கிலீஷ்காரரைப் போல் மேல் நாட்டினர். அவர்களைப்போலவே வியாபாரத்துக்காக அயல் தேசங்களுக்குப் போவதுண்டு. அங்கெல்லாம் தங்கிப் பணம் சம்பாதிப்பதுமுண்டு. ஒரு காலத்தில் டச்சுக்காரர் மிளகின் விலையைத் திடீரென்று உயர்த்தினர். அது அநியாயம் என்று இங்கிலீஷ்காரர் நினைத்தனர். உடனே இந்தியாவிலிருந்து தாமே மிளகையும் வேறு வாசனைத் திரவியங்களையும் வாங்கி வியாபாரம் செய்யத் தீர்மானித்தனர்.

அதற்காக அவர்களில் பலர் கூடி கிழக்கு இந்திய சங்கம் என்று ஒரு கூட்டு வியாபாரக் கடையை ஏற்பாடு செய்தனர். சில கப்பல்களை நமது தேசத்துக்கு அனுப்பி இங்கு கிடைக்கும் பல சாமான்களை வாங்கி விற்கலானார்கள். சிறிது சிறிதாய் அவர்கள் வியாபாரம் வலுத்தது. அவர்கள் இந்நாட்டில் நிலமும் வாங்கினார்கள். பிறகு அரசுரிமை பெற்றனர். அவர்களே இப்பொழுது நமது நாட்டை ஆளுகின்றனர் அல்லவா?

கேள்விகள்

1. தென்னாட்டில் மிளகு விளையும் இடங்கள் எவை? மிளகு எதற்கு உபயோகப்படும்?
2. இங்லண்ட் எங்கு உள்ளது? இங்கிலீஷ்காரரின் குண அதிசயம் யாது?
3. நானூறு வருஷங்களுக்கு முன் அவர்கள் செய்த துணிவான காரியங்கள் எவை?
4. அக்காலத்தில் மிளகு வியாபாரம்செய்த தேசத்தவர் யார்? அந்த வியாபாரத்தை ஏன் இங்கிலீஷ்காரர் தாமே செய்ய விரும்பினர்?
5. அதற்காக அவர்கள் செய்த ஏற்பாடு என்ன?
6. அவர்களுடைய அதிகாரம் நமது தேசத்தில் எவ்வாறு அதிகரித்தது?

24. சிறு படை பெரிய சைனியத்தை வென்றது

நாம் இன்று தென்னிந்தியாவில் ஒரு பட்டணத்துக்குப் பிரயாணம் செய்வோம். அப் பட்டணம் புதுச்சேரி. அது சென்னைக்குத் தெற்கில் நூறு மைல் தூரத்தில் கடலோரத்தில் இருக்கிறது. தென்னிந்தியா இருப்புப் பாதை வழியாய் நாம் அங்கு போகலாம்.

இது ஒரு அழகான பட்டணம். கிழக்கு மேற்கில் கடலோரத்திலிருந்து வெகு நீளமாய் அமைந்திருக்கும் பல வீதிகளை யுடையது. இந்தியர் வசிக்கும் பாகத்தில் அவ்வீதிகள் குறுகலாய் உள்ளன. சமுத்திரத்தை ஒட்டி ஐரோப்பியர் என்னும் வெள்ளைக்காரர் வசிக்கும் இடத்தில் வீதிகள் வெகு அகலமாய் இருக்கின்றன. அங்கெல்லாம் வீடுகள் தனித் தனி தோட்டத்திலுள்ள மாளிகைகள். கடற்கரையைச் சார்ந்து இப்பட்டணத்தில் ஒரு சாலையும் பல அழகிய கட்டடங்களும் இருக்கின்றன.

இது ப்ரெஞ்சுக்காரருக்குச் சொந்தமானது. இங்கிலீஷ்காரரைப் போலவே ப்ரெஞ்சுக்காரரும் மேற்கு ஐரோப்பாவில் ஒரு தேசத்தில் வசிப்பவர்கள். இந்தியாவுடன் வியாபாரம் செய்தால் நல்ல லாபம் கிடைக்கும் என்று அறிந்து அவர்களும் ஒரு வியாபார சங்கம் ஏற்பாடு செய்தனர்.

அவர்களுக்கு இத்தேசத்தில் புதுச்சேரி பிரதான நகரமாயிற்று. இங்கிருந்து அவர்கள் பல

இடங்களைச் சம்பாதித்தனர். ஒருகாலத்தில் ப்ரெஞ்சுக்காரர் தலைவர் இங்குள்ள இந்திய அரசர் சிலரிடம் சிநேகம் செய்தனர். தாம்வைத்திருந்த ப்ரெஞ்சுக்காரர் அடங்கிய சைனியத்தைக்கொண்டு அவ்வரசர்களுக்கு உதவியாய் எதிரிகளுடன் சண்டை செய்தனர். ஜயம்கிடைத்த பொழுது அவ்வரசர் ப்ரெஞ்சுத் தலைவர்களுக்கு ஏராளமான பணத்தையும் சிறு நாடுகளையும் இனாமாகத் தருவதுண்டு.



அப்பொழுது ஆற்காட்டில் நவாபு என்று ஒரு முகம்மதிய அரசன் ஆண்டு வந்தான். அவன் ப்ரெஞ்சுக்காரருக்கு இந்நாட்டில் செல்வமும் அதிகாரமும் அதிகமாகிற தென்று கண்டு அவர்கள் அதிகாரத்தைக் குறைக்க எண்ணினான். அதற்கென்று ஒருபெரிய சைனியத்தை அவர்களுக்கு எதிராய் அனுப்பினான்.

அப்பொழுது ஒரு ப்ரெஞ்சுத் தலைவன் சென்னை நகரைக் கைப்பற்றி இருந்தான். அவன் அங்கு இருக்கும்போது இப்பெரிய சைனியம் அவனைத் தாக்கியது. அச்சமயம் அவனிடம் இருநூறு வீரர்களே இருந்தனர். ஆயினும் தைரியமாய் தன்னை எதிர்த்த ஆயிரக்கணக்கான சேனையை முறியடித்தான்.

அது எப்படி சாத்தியமாயிற்று என்று கேட்பீர்களோ? இந்திய சைனியத்தில் ஒழுங்கு கிடையாது. அவர்கள் கட்டுப்பாட்டுக் கடங்கி சண்டை செய்வதில்லை. வெள்ளைக்காரரோ அப்படியல்ல. தமது சைனியத்தைச் சண்டையிடும் முறையில் முன்னதாகவே பழக்கிவைத்திருந்தனர். அவர்கள் யுத்தம் செய்யவேண்டிய முறைப்படி சத்துருவை எதிர்த்தபோது அம்முறை தெரியாது வெறுங்கூட்டமாய் இருந்த நவாபு சைனியம் ஒரு நொடியில் அழிந்துவிட்டது.

பின்னர் வெள்ளைக்காரர் இந்தியரை யுத்த முறையில் பழக்கினர். அவர்களுக்குச் சிப்பாய்கள் என்று பெயர். யுத்தப்பழக்க முள்ள சிப்பாய்கள் சத்துருவை எதிர்த்து நின்று வெள்ளைக்காரரைப் போலவே சண்டை செய்ய சாமர்த்தியம் பெற்றனர்.

கேள்விகள்

1. தென்னிந்தியா படத்தில் புதுச்சேரியைக் காட்டுக. அப்பட்டணத்தைப் பற்றித் தெரிந்தவரையில் சொல்லுக.

2. புதுச்சேரி யாருக்குச் சொந்தம்? அவர்கள் யார்? அவர்களது வியாபார சங்கம் முதலில் எப்படி விருத்தி அடைந்தது?

3. அப்பொழுது ஆற்காட்டில் ஆண்ட அரசன் யார்? அவன் ஏன் ப்ரெஞ்சுக்காரருடன் சண்டை யிட்டான்? சண்டை எங்கு நடந்தது?

4. ப்ரெஞ்சு சைனியத்தின் தொகை என்ன? எதிரிகளின் தொகை என்ன? ப்ரெஞ்சு சைனியம் வென்றதற்குக் காரணம் என்ன? இந்திய சிப்பாய்கள் எப்படி நல்ல யுத்தவீரர் ஆனார்கள்.

25. கஞ்சியே எங்களுக்குப் போதும்

ப்ரெஞ்சுக்காரருக்குப் புதுச்சேரி முக்கியமான பட்டணம் அல்லவா? அதுபோலவே இங்கிலீஷ் காரருக்குச் சென்னை நகர் முக்கியப் பட்டணமாய் இருந்தது. அங்கு அவர்கள் ஒரு கோட்டையைக் கட்டி அதில் ஒரு பெரிய கடை ஏற்படுத்திக் கொண்டு இருந்தனர். அங்கிருந்து அதைச்சுற்றி யுள்ள இடங்களில் தங்களுக்கு வேண்டிய சாமான் களை விலைக்கு வாங்குவார்கள். அவற்றின் கிரயத்தை நாணயமாகக் கொடுப்பார்கள்.

அதனால் பல வியாபாரிகள் சென்னை நகரில் வந்து தங்கினர். பல தொழிலாளிகளும் அங்கு வந்து சேர்ந்தனர். இங்கிலீஷ்காரர் முக்கியமாய் துணி, ரத்தினம் முதலிய சாமான்களை

வாங்கிக்கொண்டு அதற்குப் பதிலாய் கண்ணுடி சாமான், கத்தி, கம்பளம், தங்கம், வெள்ளி முதலிய வற்றைக் கொடுத்தனர். இந்தியர் தங்கின இடங்கள்தான் இப்பொழுது பட்டணத்தின் பகுதிகளான ஜியார்ஜ்டவுன், வண்ணுரப்பேட்டை, ராயப்பேட்டை முதலிய பலபாகங்களாக இருக்கின்றன.

ப்ரெஞ்சுக்காரர் தென்னிந்திய அரசரில் சிலருடன் சினேகம் செய்ததாகச் சொல்லி இருக்கிறது. வேறு அரசர்கள் இங்கிலீஷ்காரரின் உதவியைத் தேடினர். இவ்விரண்டு வெள்ளைக்காரச் சங்கங்களும் இத்தேசத்தில் போட்டி வியாபாரம் செய்தனர். ஆதலால் அவர்களுக்குள் அதிக விரோதம் ஏற்பட்டது. இதனுல் ஒரு அரசன் ப்ரெஞ்சுக்காரரின் உதவியைத்தேடினுல் அவ்வரசனின் சத்துரு இங்கிலீஷ்காரரின் உதவியை அடைவான்.

அப்பொழுது ஆற்காட்டு அதிபதியான அன்வாருடீன் இங்கிலீஷ்காரருக்கு வேண்டியவன். அவனுக்கு எதிராய் அவன் உறவினன் சந்தா சாகிப் என்பவனுக்குப் ப்ரெஞ்சுக்காரர் உதவி செய்தனர். அன்வாருடீன் யுத்தத்தில் இறக்க, அவனுடைய மகன் முகம்மது அலி யுத்தகளத்தைவிட்டு ஓடினுன். தனக்குச்சொந்தமான திருச்சிராப்பள்ளிக்கோட்டையில் போய்ச்சேர்ந்தான். சந்தாசாகிப் ப்ரெஞ்சுக்காரருடன் அக்கோட்டையைத் தனது சைனியத்தால் வளைத்துக்கொண்டான்.

அப்பொழுது இங்கிலீஷ்காரர் முகம்மது அலிக்கு ஒரு உதவி செய்தனர். அவர்களிடம் ராபர்ட்கிளைவ் என்ற சாமர்த்திய முடைய இளைய வீரன் ஒருவன் உத்தியோகத்தில் இருந்தான். அவன், "நவாபின் தலைநகராகிய ஆற்காட்டை நாம் பிடித்துக்கொண்டால், சந்தா சாகிப் அதைத் திரும்பிப் பிடிக்கத் திருச்சிராப்பள்ளிவிட்டு வருவான். அல்லது பெரிய சைனியத்தையாவது அனுப்புவான். அதனால் திருச்சிராப்பள்ளி முற்றுகை நடைபெறாது. முகம்மது அலிக்கு நன்மை ஏற்படலாம்" என்று சொன்னான். அப்பொழுது, அவ்வீரனையே தலைவனாக ஏற்படுத்திச் சில இங்கிலீஷ் துருப்புகளையும் சில சிப்பாய்களையும் ஆற்காட்டுக்கு அனுப்பினார்கள். ஆற்காடு பிடிபட்டது. அந்த செய்தி கேட்ட சந்தாசாகிப் தன்சைனியத்தின் பெரும் பாகத்தை ஆற்காட்டைக் கைப்பற்ற அனுப்பினான்.

கிளைவின் சைனியம் சிறியது. சந்தா சாகிபின் சைனியம் ஆற்காட்டைச் சுற்றி வளைத்துக் கொண்டது. கிளைவினிடம் சாப்பாட்டுக்கு வேண்டிய போதுமான ஆகாரம் இல்லை. ஆயினும் அவன் கோட்டையை விட்டுவிட வில்லை. அவனிடமுள்ள சிப்பாய்கள் தமது தலைவனைப் பார்த்து, "ஐயா! எங்களுக்கு அரிசிக் கஞ்சியே சாப்பாட்டுக்குப் போதும். வெள்ளைக்கார துருப்புகளே அன்னத்தை உண்ணட்டும்" என்று சொல்லினர்.

இங்கிலீஷ்காரருக்காக இச் சிப்பாய்கள் உண்மைச் சேவகம் செய்தனர் அன்றோ!

கேள்விகள்

1. தென்னிந்தியாவில் வந்த இங்கிலீஷ் வியாபாரிகளுக்கு முக்கிய நகரம் யாது? தங்கள் வியாபாரத்தை ஒழுங்காக நடத்த என்ன ஏற்பாடு செய்தனர்?
2. இங்கு அவர்கள் முக்கியமாய் என்னென்ன சரக்குகளை வாங்கினர்? என்னென்ன சரக்குகளை விற்றனர்?
3. அவர்களுடன் வியாபாரம் செய்ய வந்த இந்தியர் வசித்துவந்த சென்னையின் பாகங்கள் எவை?
4. இங்கிலீஷ் வியாபாரிகளுடன் போட்டியிட்டவர் யார்? அதனால் இங்கிலீஷ்காரர் தமது விரோதிகளுக்கு எதிராய் என்ன செய்வது வழக்கம்?
5. அப்பொழுது ஆற்காட்டில் ஒருவரை ஒருவர் எதிர்த்து நின்ற முகம்மதியத் தலைவர்கள் யார்? அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒத்தாசை செய்ய வந்த ஐரோப்பியர்கள் யார்?
6. தோற்றுப்போன நவாபின் மகன் எங்கு ஒளிந்தான்? அவனை அவன் எதிரிகள் என்ன செய்தனர்?
7. ராபர்ட் கிளைவ் யார்? அவன் சொன்ன புத்திமதி என்ன? அதன்பேரில் இங்கிலீஷ் தலைவர்கள் என்ன செய்தார்கள்?
8. தமது சைனியத்திற்கு யாரைத் தலைவனாக அனுப்பினர்? கிளைவ் அப்பொழுது எந்த இடத்தைப் பிடித்தான்?

9. அப்பொழுது சந்தா சாகிப் என்ன செய்தான்? கிளைவ், நவாப் இவர்களின் சைனியத்தைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

10. சாப்பாடு குறைந்த பொழுது இந்திய சிப்பாய்கள் தலைவனிடம் என்ன சொன்னார்கள்?

26. டில்லியில் ஒரு கொண்டாட்டம்

இந்தியா சிறிது சிறிதாக இங்கிலீஷ்காரர் வசமாயிற்று. அதை அந்நாட்டு அரசியான விக்டோரியா மகாராணி அரசாண்டார். அவருக்குப் பிறகு அவர் குமாரர் எட்வர்ட் சக்கரவர்த்தி அரசனாய் இருந்தார். அவருக்குப் பிறகு அவரது குமாரர் ஜியார்ஜ் பட்டத்துக்கு வந்தார்.

இங்கிலீஷ் அரசர்களுள் பலருக்கு ஜியார்ஜ் என்ற பெயர் உண்டு. அவர்களில் அப்பெயருடைய முதல்வர் முதலாவது ஜியார்ஜ். மற்றவர் முறையே இரண்டாவது, மூன்றாவது, நான்காவது ஜியார்ஜ் என அழைக்கப்பட்டனர். அப்போது பட்டத்துக்கு வந்தவர் ஐந்தாவதுஜியார்ஜ் மன்னர்.

இம்மன்னர் இந்தியாவுக்கு நேரில் வந்து டில்லியில் இந்திய சக்கரவர்த்தி என முடிசூட்டிக் கொண்டனர். அப்பொழுது டில்லியில் ஒரு பெரிய கொண்டாட்டம் (தர்பார்) நடந்தது. அளவில்லாத திரவியம் செலவழித்து வெகு சம்பிரமமாக முடிசூட்டு வைபவத்தை முடித்து வைத்தனர்.

இந்தியாவிலுள்ள பல சமஸ்தான அதிபதிகளும் அங்கு வந்து சக்கரவர்த்தியைப் பணிந்து அவரை ராஜாதி ராஜனென ஒப்புக்கொண்டனர்.

இத்தேசத்தில் ஒவ்வொரு பாகத்திலும் இருந்து பெரிய மனிதர்கள் அக் கொண்டாட்டத்துக்குச் சென்றனர். **1911**-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் **12**-ஆம் தேதி அக்கொண்டாட்டம் நடைபெற்றது. ஆகையால் அந்த தர்பார் ஞாபகத்துக்காக ஒவ்வொரு வருஷமும் டிசம்பர்மீ **12**-ஆம் தேதி கல்விச் சாலைகளிலெல்லாம் விடுமுறை நாளாக இருந்து வந்தது.

சக்கரவர்த்தியும் அவரது ராணியும் இந்தியாவில் சுமார் நாற்பது நாள் இருந்தனர். இத்தேசத்திலுள்ள பல அதிசயங்களையும் பார்த்து பலர் நட்புக் கொண்டு, இங்லண்ட் போய்ச் சேர்ந்தனர். அவர்களுக்கு இத்தேசத்தை மறக்க முடியாது. அம்மாதிரியே இந்தியரும் நமது சக்கரவர்த்தியை மறக்க முடியாது.

கேள்விகள்

1. நம்மை ஆண்ட ஜியார்ஜ் மன்னரை ஐந்தாம் ஜியார்ஜ் என்று ஏன் அழைக்கவேண்டும்?
2. அவர் இந்திய சக்கரவர்த்தியாக எங்கு முடிசூட்டிக் கொண்டார்?
3. அம் முடி சூட்டு உற்சவம் எப்பொழுது நடந்தது?
4. கல்விச் சாலைகளில் பிள்ளைகளுக்கு அந்த நாளை எப்படி நினைப்பு மூட்டுகின்றனர்?

27. ஆறுவது ஜியார்ஜ் மன்னர்

இங்கிலாந்தில் கடற்கரையோரத்தில் ஒரு சிறந்த இடம். அங்கு நானூறு சிறு பையன்கள் ஒன்று கூடிப் பதினைந்து நாட்களாக வாழ்ந்து வருகிறார்கள். சேர்ந்து சாப்பிட்டும், விளையாடியும் அவர்கள் பொழுதைச் சந்தோஷமாகக் கழித்தனர். அவர்களில் இருநூறு பெயர்கள் அந்நாட்டில் உள்ள பெரிய மனிதர்களுடைய பிள்ளைகள். மற்றவர் எளிய கூலி வேலைக்காரர்களுடைய குழந்தைகள்.



பணக்காரரும் ஏழைகளும் ஒன்றுகூடிச் சிநேகமாக இருப்பது அரிதல்லவா? அவர்களுடைய நாட்டில் அது மிகவும் அரிது. ஆயினும் அவர்களை ஒரு இளம் பிராயத்தரான பிரபு அப்படி வருஷம் ஒரு முறை ஒன்றுகூட்டி வைத்தார்.

அதனல் பிள்ளைகள் வித்தியாச மில்லாமல் வாழப் பழக்கப்பட்டனர். அக் கூட்டங்கள் பதினைந்து வருஷங்களாக நடைபெற்றன.

அந்தப் பிரபுதாம் நம்மை இப்பொழுது ஆளும் ஜியார்ஜ் சக்கரவர்த்தி. அந்நாளில் அவரது தகப்பன் ஐந்தாம் ஜியார்ஜ் சக்கரவர்த்தியாய் இருந்தார். பிறகு அவரது மூத்த குமாரர் எட்டாவது எட்வர்ட் பட்டம் பெற்ருர். ஆனல் அவர் சில மாதங்கள் ஆண்டபிறகு தமக்கு ராஜ்யம் வேண்டா மென்று சொல்லிவிட்டார். அதனல் அவரது தம்பியான, நமது சிறுவரின் நேசர், ஜியார்ஜ் பட்டத்துக்கு வந்தார்.

அவருக்குச் சிறு பிள்ளைகளிடம் மாத்திரமல்ல பெரியவர்களான நமது குடிஜனங்களிடமும் அதிகப் பற்று உண்டு. நமது சக்கரவர்த்தி மிக்க நல்லவர். அவரைப்பற்றி ஒருவரும் குறை கூற மாட்டார்கள். நன்கு போற்றுவார்கள்.

கேள்விகள்

1. தற்காலத்தில் நமது அரசர் யார்? அவர் ஐந்தாம் ஜியார்ஜ் மன்னருக்கு என்ன உறவு?
2. இவருக்கு எப்படிப் பட்டம் கிடைத்தது?
3. இவர் ஒரு பிரபுவாயிருந்த காலத்தில் என்ன அரிய காரியம் செய்தார்? அதனல் அவரைப் பற்றி நாம் என்ன நினைக்கிருேம்?

பிள்ளைகளே! இதுவரையில் நமது தேசத்தில் நடந்த பல விஷயங்களைப்பற்றிப் படித்தீர்கள். பல பெரியோரின் கதைகளைத் தெரிந்து கொண்டீர்கள். அவர்களில் சிலர் கொடூரமும், கெட்ட குணமும் பொருந்தியவர். சிலர் நற்குணமும் நல்லொழுக்கமும் உடையவர். நல்லவர்களுக்கு நன்மையே உண்டாகும் என்பது திண்ணம். ஆகையால் நீங்கள் உலகத்தில் நற்குணமுடையவராக இருந்து வாழவேண்டுமென்று மேற்கூறிய கதைகளால் விளங்குகிறது.

குறிப்பு

இந்திய சக்கரவர்த்திகள் :—

விக்டோரியா மகாராணி
|
ஏழாவது எட்வர்டு
|
ஐந்தாம் ஜியார்ஜ்
|
எட்டாவது எட்வர்டு
|
ஆறுவது ஜியார்ஜ்

Printed at the 'Caxton Press', Madras — 1939.

Caxton
Press,
Madras